CLARIANT

# We Reflect Our-selves

கிளாரியண்ட்
நெறிமுறைகள் குறியீடு

what is precious to you?

# We Reflect Our-selves

கிளாரியண்ட் -இல், நமது முடிவுகளும், செயல்களும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை நாங்கள் அறிவோம். நாம் பிற மனிதர்கள், நமது சுற்றுச்சூழல், நம்மைச் சுற்றியுள்ள சமூகங்கள் மீது அக்கறை கொண்டிருக்கிறோம். நாம் செய்வது சரியான வழியில் செய்யப்படுவதை உறுதிசெய்ய நாம் நமது நடத்தைகளைக் கருத்தில் கொள்கிறோம்.

# தலைவரிடமிருந்து செய்தி

அன்பான சக ஊழியர்களே,
ஸ்பெஷால்டி கெமிக்கல்ஸ் துறையில் ஒரு முன்னணி நிறுவனமாக இருக்க வேண்டும் என்பதே நமது குறிக்கோள். வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், பங்குதாரர்கள், நாம் இயங்கும் சமூகங்கள் ஆகிய அக்கறை கொண்டிருப்போர் அனைவருக்கும் சராசரிக்கும் அதிகமான மதிப்பை உருவாக்குவதன் மூலம் நாம் இதைச் சாதிக்கிறோம்.
கிளாரியண்ட் -இல், நமது முடிவுகளும், செயல்களும் சுற்றுச்சூழல் மீதும், நம்மைச் சுற்றியுள்ள மனிதர்கள் மீதும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை நாங்கள் அறிவோம். நாம் யார், நாம் எதை ஆதரிக்கிறோம் என்பதை நமது நடத்தை பிரதிபலிக்கிறது. எப்போதும் மாறிவரும் சூழலில், வலுவான வழிகாட்டுதல் கொள்கைகள் நம்மிடம் இருப்பது மிகவும் முக்கியம் ஆகும். நமது ஆறு மதிப்புகள், நம் பிராண்ட் மற்றும் இந்த நெறிமுறைகள் குறியீடு அனைத்தும் நமது அடையாளத்தின் ஒரு பகுதியாகும் - இவை அனைத்தும் கிளாரியண்ட் -இல் வலுவாக மற்றும் தனித்துவமாக நம்மை ஆக்குகின்றன.

நமது நெறிமுறைகள் குறியீடு, நாம் நடந்துகொள்ளும் விதத்திலும், நாம் தொழில் செய்யும் விதத்திலும் நெறிமுறைகளுக்கும், நேர்மைக்குமான நம் விட்டுக்கொடுக்காத பற்றுறுதியைக் குறிக்கிறது. நாம் ஒவ்வொருவரும் - இயக்குநர்கள் குழுவில், செயற்குழுவில், நிர்வாகத்தில் மற்றும் அனைத்து நிறுவனப் பிரிவுகளிலும் உள்ள அனைவரும் - நமது அன்றாட வேலையை வழிநடத்தும் மதிப்புகள் மற்றும் கொள்கைகளைப் புரிந்துகொள்ளவேண்டும் மற்றும் பின்பற்ற வேண்டும். நாங்கள் விதிகளைப் பின்பற்றுகிறோம், மிக உயர்ந்த நெறிமுறைத் தரங்களைக் கடைப்பிடிக்கிறோம், வாக்குறுதியளித்ததை நிறைவேற்றுவோம். தெளிவாக இல்லாத விஷயங்களைப் பற்றி? நமது நெறிமுறைகள் குறியீட்டில் குறிப்பிடப்படாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் மற்றும் அதற்கு ஒரு நேரடியான பதில் இல்லை என்றால் நாம் என்ன செய்வது? நெறிமுறை சார்ந்த குழப்பங்களை எதிர்கொள்ளும் போது அல்லது வழிகாட்டுதல் இல்லாத போது நாம் முடிவுகளை எடுக்க வேண்டிய சூழ்நிலைகள் இருக்கும் என்பதை நாம் அறிந்தேற்க வேண்டும்.

இந்த நெறிமுறைகள் குறியீடு ஒரு திசைகாட்டி, இது நம் அனைவருக்கும் வெளிப்படையாகவும், நேர்மையுடனும் செயல்பட உதவும். இதில் எல்லாப் பதில்களும் இல்லை என்றாலும், சரியான முடிவுகளை எடுப்பதை இயலச் செய்வதற்கு உங்களுக்கு இது கருவிகளை வழங்குகிறது. நேர்மைக்கான 'ஆம்' சரிபார்ப்புச் சோதனையானது, இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலைகளில் பயன்படுத்தவும், உங்கள் சிறந்த புத்திக்கூர்மையைப் பயன்படுத்தவும், கேள்விகளைக் கேட்கவும், உங்களுக்குத் தேவைப்பட்டால் ஆலோசனை பெறவும் நான் ஊக்குவிக்கும் ஒரு கருவியாகும். நாம் அனைவரும் சில சமயங்களில் நெறிமுறைச் சிக்கல்களை எதிர்கொள்கிறோம், சரியானதைச் செய்வது சில சமயங்களில் மிகவும் கடினமான விஷயமாகும். உங்களுக்கு எல்லா நேரங்களிலும் பதில் தெரியாமல் இருக்கலாம், அது பரவாயில்லை. ஆனால் தயவுசெய்து உங்களுக்கு ஆதரவு தேவைப்படும்போது அல்லது உங்களுக்கு ஏதாவது சரியாகப் படாத ஒன்றை கவனிக்கும்போது பேச மறக்காதீர்கள்.

கவலைகளை எழுப்பும், அல்லது நன்னம்பிக்கையில் சாத்தியமான அல்லது உண்மையான மீறலைச் சுட்டிக் காட்டும் எந்த ஒருவரும் சொல்வது கேட்கப்படுவதையும், அவர் ஆதரவையும், மரியாதையையும் பெறுவதையும், அவர்களுக்கு எதிராகப் பழிவாங்கல் நடவடிக்கை எதுவும் இருக்காது என்பதையும் உறுதி செய்வதில் கிளாரியண்ட் முழுமையான பற்றுறுதியைக் கொண்டுள்ளது. நெறிமுறைகள் குறியீட்டை வாசிப்பது நம் ஒவ்வொருவருக்கும் முக்கியத் தகவல்களை வழங்குவதோடு மட்டுமல்லாமல், இது சுய-சிந்தனைக்கான ஒரு செயலுமாகும். இன்று நாம் தொழில் செய்யும் விதம் மற்றும் எதிர்காலத்தில் நாம் தொழில் செய்ய உத்தேசிக்கும் விதம் பற்றிச் சிந்திக்க இதை ஒரு வாய்ப்பாக நாம் பார்க்க வேண்டும். ஒவ்வொரு சாத்தியமான சூழ்நிலையிலும் நம்மால் ஒரு விதியை உருவாக்கவும், எழுதவும் முடியாது, ஆனால் நம்மால் என்ன செய்ய முடியும் என்றால், நம் நெறிமுறைகள் குறியீட்டை ஒரு தார்மீக திசைகாட்டியாகப் பயன்படுத்த உங்களுக்கு அதிகாரமளிக்கமுடியும். எப்போதாவது என்ன செய்யவேண்டும் என்பது குறித்து உங்களுக்குக் குழப்பமாக இருந்தால், உதவிக்குத் தொடர்புகொள்ளுங்கள், ஏனென்றால் நெறிமுறை சார்ந்து தொழில் செய்வதற்கு முன்னுரிமை அளிக்கும் நிறுவனம் பணிபுரிய உண்மையிலேயே மிகச்சிறந்த நிறுவனம் ஆகும்.

உண்மையுள்ள,

Günter von Au
இயக்குநர்கள் குழுவின் தலைவர்

# பொருளடக்க அட்டவணை


04 தலைவரிடமிருந்து செய்தி
08 இந்த நெறிமுறைகள் குறியீட்டை எவ்வாறு
10 பயன்படுத்துவது
12 அமலாக்குதல்நமது
14 மதிப்புகள்
Integrity ‘Yes’-Check
16 நமது பொறுப்பு

20 நேர்மை உங்களிடமிருந்து தொடங்குகிறது - குரல் கொடுங்கள்!
22 பழிவாங்கலில் இருந்து பாதுகாப்பு
24 நமது வழிகாட்டும் கோட்பாடுகள்

## 26
**நாங்கள் ஒருவருக்கொருவரை மரியாதையுடன் நடத்துகிறோம்**

28 மக்களை நடத்துவது
30 தொல்லை
34 சமத்துவம் மற்றும் பாகுபாடு இல்லாமை
38 தொழிலாளர் உரிமைகளை மதித்தல்

## 42
**நாங்கள் உன்னதமான நெறிமுறைத் தரநிலைகளுக்கும், சட்டத்திற்கும் இணங்குகிறோம்**

44 நியாயமான போட்டி
50 மோசடி
54 உள் வர்த்தகம்
58 பணமோசடி
60 வணிகத்தடை மற்றும் வர்த்தகக் கட்டுப்பாட்டு அம்சங்கள்

## 64
**நாங்கள் பாதுகாப்பிற்கு முதலிடம் தருகிறோம், மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறோம்**

66 சுற்றுச்சூழல்
68 சுகாதாரம் மற்றும்
72 பாதுகாப்பு தயாரிப்பு வழிநடத்தல்

## 74
**ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு நாம் அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளோம்**

76 லஞ்சம் மற்றும் ஊழல் பரிசுகள் மற்றும்
82 பொழுதுபோக்கு
88 அரசியல் செயல்பாடுகள்

## 92
**நாம் நமது சமூகத்தைப் பற்றி அக்கறை கொண்டுள்ளோம், மற்றும் ஒரு நல்ல கார்ப்பரேட் குடிமகனாக நடந்து கொள்கிறோம்**

94 மனித உரிமைகளை மதித்தல்
96 தொண்டுநிறுவனத்திற்கு அன்பளிப்புகள், ஸ்பான்சர்ஷிப்கள் மற்றும் கார்ப்பரேட் குடியுரிமை
100 நடவடிக்கைகள் நலன் முரண்பாடுகள்

## 104
**நாங்கள் தகவல்களைக் கவனமாகக் கையாளுகிறோம்**

106 தகவல் பாதுகாப்பு
110 தரவு தனியுரிமை
114 துல்லியமான கணக்குப் பதிவேடுகள் மற்றும் பதிவுகள்

## 118
**நாங்கள் பொறுப்புடன் தகவல் தொடர்பு கொள்கிறோம்**

120 சமூக ஊடகம்
126 ஊடக உறவுகள் மற்றும் முதலீட்டாளர் உறவுகள்

## 130
**நாம் நமது வளங்களைப் பராமரிக்கிறோம்**

132 வணிக சொத்துக்கள்
134 மின்னணு வளங்கள்
136 அறிவுசார் சொத்து

# இந்த நெறிமுறைகள் குறியீட்டை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் அது யாருக்குப் பொருந்தும்

சர்வதேச அளவில் செயல்படும் நிறுவனத்தின் ஒரு பகுதியாக நாம் இருப்பதால், சிக்கலான மற்றும் கடினமான சூழல்களுக்கு நாம் தினமும் உட்படுத்தப்படுகிறோம். நமது பணிக்காலத்தில், ஒரு கட்டத்தில், கடினமான முடிவுகள் தேவைப்படும் சவாலான சூழ்நிலைகளை நாம் சந்திக்க நேரிடும், அப்போது எது சரியானது என்பது வெளிப்படையாகத் தெரிவதில்லை. இதேபோல், சவாலான சூழ்நிலைகளை நாம் எதிர்கொள்ள நேரிடும், ஆனால் எது சரியானது என்பது வெளிப்படையாகத் தெரியவரும், ஆனால் முடிவெடுப்பது கடினமாக இருக்கும். இந்த நெறிமுறைகள் நாம் எதிர்கொள்ளக்கூடிய ஒவ்வொரு சூழ்நிலையையும் விவரிக்க முடியாது என்பதால், என்ன செய்வது என்று நமக்குத் தெரியாத போதெல்லாம் ஆலோசனையைப் பெறுவது அவசியம்.

கிளாரியண்ட் -இன் நெறிமுறைகள் குறியீடு ஒரு திசைகாட்டி ஆகும், இது சரியான பாதையில் இருப்பதற்கும், உங்கள் மற்றும் நிறுவனத்தின் சிறந்த நலனில் செயல்படுவதற்கும் இந்த முடிவு எடுக்கும் செயல்முறையின் வழியாகச் செயல்பட உதவும்.

எந்தவொரு பொருந்தக்கூடிய பணிநியமன ஒப்பந்தம் அல்லது கையேட்டின் ஒருங்கிணைந்த பகுதியாகவும் கிளாரியண்ட் நெறிமுறைகள் குறியீடு அமைகிறது. சாத்தியமான மீறல்கள் மீது விசாரணை செய்யப்படும் மற்றும் அது உறுதிப்படுத்தப்பட்டால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நெறிமுறைகள் குறியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தரநிலைகள் உள்ளூர்ச் சட்டத்தால் வெளிப்படுத்தப்பட்டதை விட அதிகமாக இருந்தால், இந்த நெறிமுறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள தரநிலைகள் பொருந்தும். இருப்பினும், உள்ளூர்ச் சட்டங்கள் இந்தக் குறியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்களுடன் முரண்படும் எதிர்பாராத சந்தர்ப்பத்தில், உள்ளூர்ச் சட்டங்கள் பொருந்தும். இத்தகைய சூழ்நிலைகளில், ஒரு பிராந்திய மேலாளர், நாட்டு மேலாளர் அல்லது நிறுவனத்திற்குள் உள்ள பிற தொடர்புடைய அதிகாரிகளிடமிருந்து வழிகாட்டுதலைப் பெறுவது சிறந்தது.


# செயல்படுத்தல் மற்றும் அமலாக்கம்

கிளாரியண்ட் நெறிமுறைகள் குறியீட்டை முழுமையாக அமல்படுத்துவதற்கு பொருத்தமான தீர்மானங்களை நிறைவேற்ற அனைத்து கிளாரியண்ட் நிறுவனங்களின் நிர்வாகக் குழு மற்றும் நிர்வாகத்தை இயக்குநர்கள் குழு கட்டாயப்படுத்துகிறது. ஒவ்வொரு கிளாரியண்ட் ஊழியர், மேலாளர் மற்றும் இயக்குநர்கள் குழுவின் உறுப்பினர் ஆகியோருக்கு நெறிமுறைகள் குறியீட்டுக்கு அணுகல் வழங்கப்படும். நெறிமுறைகள் குறியீட்டுக்கு இணங்கவும், கவலைகளை எழுப்பவும் அல்லது கவனிக்கப்பட்ட எந்தவொரு மீறலையும் குறித்துத் தெரிவிக்கவும் நம் ஒவ்வொருவருக்கும் பொறுப்பு உள்ளது.

நாங்கள் கவலைகளையும், அறிக்கைகளையும் மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்வோம், அவற்றைக் கவனமாக மீளாய்வு செய்வோம். நம் நெறிமுறைகள் குறியீட்டின் மீறல்கள் நிரூபிக்கப்பட்டால், அவற்றைச் சரிசெய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

# நமது மதிப்புகள்

கிளாரியண்ட் -இன் கார்ப்பரேட் மதிப்புகள் கிளாரியண்ட் -க்கு மிக முக்கியமான அடிப்படை நம்பிக்கைகள் மற்றும் நடத்தைகளை வெளிப்படுத்துகின்றன. அவை எங்கள் செயல்பாடுகளை வழிநடத்துகின்றன, நம் அனைவரையும் ஒரே திசையில் நகர்த்துகின்றன, நம் தொழிலில் பங்கு உள்ள அனைவருக்கும் தெளிவான சமிக்ஞையை அனுப்புகின்றன. கிளாரியண்ட் -இன் நெறிமுறைகள் குறியீட்டுடன் சேர்ந்து, கிளாரியண்ட் -இல் நாம் தொழில் செய்யும் முறையை அவை அடிப்படையில் வரையறுத்து வடிவமைக்கின்றன.




கிளாரியண்ட் -இன் செயல்திட்டத்தைச் செயல்படுத்த நாம் அனைவரும் இந்த மதிப்புகளுக்கு ஏற்ப நடந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

# Integrity 'Yes'-Check

ஒவ்வொரு கிளாரியண்ட் பணியாளரும் தமது சிறந்த அறிவைப் பயன்படுத்துவார்கள் மற்றும் முடிவுகளைக் கவனமாகப் பரிசீலித்து எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சில நேரங்களில், முடிவுகள் எடுப்பது தெளிவாக இருப்பதில்லை. சந்தேகம் இருந்தால், கிளாரியண்ட் **Integrity 'Yes'-Check** பயன்படுத்துவது ஆபத்துக்களைத் தவிர்க்கவும், உங்கள் செயல்களை மற்றவர்கள் எவ்வாறு கருதக்கூடும் என்பதைப் பிரதிபலிக்கவும் உதவும். கீழேயுள்ள எல்லாக் கேள்விகளுக்கும் 'ஆம்' மூலம் பதிலளிக்க முடிந்தால், நீங்கள் சரியானதைச் செய்யப் போகிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.

**1**

நான் நேர்மையுடன் செயல்படுவதாகக் காணப்படுகிறேனா?

**2**

ஒரு வேளை கிளாரியண்ட் எனது சொந்த நிறுவனமாக இருந்தால், நான் அதே முடிவைத்தான் எடுப்பேனா?

**3**

எனது நடத்தை கிளாரியண்ட் -இன் மதிப்புகள் மற்றும் நெறிமுறைகளுடன் இணக்கமாக உள்ளதா?

**4**

எனது செயல்களில் எனது குடும்பத்தினரும், நண்பர்களும் பெருமைப்படுவார்களா?

**5**

எனது நடத்தை பற்றிய செய்தி ஒரு புகழ்பெற்ற செய்தித்தாளின் முதல் பக்கத்தில் வந்தால் எனக்குப் பெருமையாக இருக்குமா?

கிளாரியண்ட் **Integrity 'Yes'-Check** -க்குப் பதிலளிக்கும் போது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாவிட்டால், சரியான வழி என்னவென்றால். செய்வதை நிறுத்திவிட்டு, வழிகாட்டுதலைக் கேட்பதுதான்.

# நமது பொறுப்பு

கிளாரியண்ட் -இன் நற்பெயரைப் பாதுகாத்து, மற்றும் அதனுடன், நாம் அனைவரும் சமமாக பங்களித்தால் மட்டுமே நமது நிலையான வெற்றி உறுதிப்படுத்தப்படும். எனவே, எல்லா நேரங்களிலும் நமது நெறிமுறைகள் குறியீட்டுக்கு ஏற்ப செயல்படுவது நம் ஒவ்வொருவரின் பொறுப்பாகும்.

இதன் பொருள் என்னவென்றால், பணியாளர்களாகிய நாம்:

—

கிளாரியண்ட் -இன் நெறிமுறைகள் குறியீட்டைப் படிப்போம் மற்றும் புரிந்து கொள்வோம், மற்றும் அதில் ஏதாவது தெளிவாகப் புரியவில்லை என்றால், கேள்விகளைக் கேட்போம்;

-

கொடுக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட எந்தக் குறியீடு தொடர்பான பயிற்சியையும் பூர்த்தி செய்வோம்;

-

நெறிமுறைகள் குறியீட்டுக்கு இணங்க, எந்தக் கவலையையும் அல்லது சாத்தியமான மீறலையும் தெரிவிப்போம்; மற்றும்

-

ஒரு நிலைமை குறித்து எங்களுக்குச் சந்தேகம் இருந்தால் அல்லது நிச்சயமாகத் தெரியாவிட்டால் ஆலோசனை கேட்போம்.

மேலும், நிர்வாக மட்டத்தில் இருப்பவர்களின் பொறுப்பு விரிவானதாகும். கிளாரியண்ட் மேலாண்மை இவ்வாறு செய்யப்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது:

-

கிளாரியண்ட் -இன் மதிப்புகள் மற்றும் இந்த நெறிமுறைகள் குறியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தரநிலைகளின் படி வெளிப்படையாக நடந்து கொள்வதன் மூலம் நெறிமுறைத் தலைமையை நிரூபிக்கவேண்டும்;

-

தவறான நடத்தை குறித்து எச்சரிக்கப்படும்போது குரல் கொடுங்கள் - பாராமுகமாக இருந்துவிடாதீர்கள்;

-

ஒரு செயல் சட்டப்பூர்வமானதா என்று சந்தேகம் வரும் போதெல்லாம் செயலூக்கமாக இருங்கள் மற்றும் மேலும் தகவல்களைத் தேடுங்கள். ஒரு வித்தியாசமான கலாச்சாரச் சூழலில் விஷயங்கள் அப்படித்தான் செய்யப்படுகின்றன என்று ஊகித்துக்கொள்வது சிறந்த நடைமுறை கிடையாது;

-

இந்த நெறிமுறைகள் குறியீட்டைப் பற்றி மற்றும் எதிர்பார்க்கப்படும் நடத்தையைப் பற்றி அறிந்து கொள்ளவும், புரிந்து கொள்ளவும், தொடர்ந்து விவாதிக்கவும் குழு உறுப்பினர்களை ஊக்குவிக்கவும்;

-

குழு உறுப்பினர்கள் குரல் கொடுப்பதற்கு மேடையை வழங்கவும், அவர்கள் கூறுவதைக் காதுகொடுத்துக் கேட்கவும் - மற்றும் பின்னூட்டங்களை வெளிப்படையாக வழங்கவும்;

-

அணி உறுப்பினர்கள் கவலைகளை எழுப்ப ஏதுவான சூழலை உருவாக்கவேண்டும்; மற்றும்

--

அணி உறுப்பினர்களிடமிருந்து கூடிய விரைவில் அறிக்கைகளை மேலிடத்திற்கு அனுப்பவும் - அவற்றின் மீது நீங்களே சுதந்தரமாக விசாரணை செய்யவேண்டாம்.

# நேர்மை உங்களுடன் தொடங்குகிறது - தைரியமாகப் பேசுங்கள்!

நமது நெறிமுறைகள் குறியீட்டை மீறுவதாக நீங்கள் கருதும் எந்த நடத்தையையும் கவனித்தால் அதைக் குறித்து தைரியமாகப் பேசுமாறு கிளாரியண்ட் உங்களை ஊக்குவிக்கிறது. நிலைமையையும், உங்கள் கவலைகளைப் பகிர்ந்து கொள்வது தொடர்பான உங்கள் சௌகரியத்தன்மையையும் பொறுத்து, உங்கள் மேற்பார்வையாளரிடம், உங்கள் இணக்க அதிகாரியிடம் அல்லது மனிதவளத் துறை (HR), சட்டத் துறை அல்லது சுற்றுச்சூழல், பாதுகாப்பு மற்றும் சுகாதார விவகாரங்கள் (ESHA) ஆகிய அமைப்புகளிலிருந்து யாராவது ஒருவரிடம் பேசுவது மிகவும் சிறந்தது.

சில நேரங்களில், ஒருவருடன் தனிப்பட்ட முறையில் பேசுவது கடினமாக இருக்கும், மற்றும் நீங்கள் அடையாளம் காணப்படலாம் என்ற பயம் உங்களுக்கு இருப்பதால் நீங்கள் பேசுவது உங்களுக்குச் சௌகரியமாக இல்லாமல் இருக்கலாம். கிளாரியண்ட் -இன் நேர்மைத் தடம் என்பது சுதந்தரமான மூன்றாம்-தரப்பினரால் இயக்கப்படும் ஒரு இரகசிய சேனலாகும், இதன் வழியாக நீங்கள் உங்கள் கவலையை எழுப்பலாம் மற்றும் - நீங்கள் விரும்பினால் - அவ்வாறு செய்யும்போது அநாமதேயராக இருக்கலாம். இணக்கத் துறை அனைத்து அறிக்கைகளையும் பெறும், மேலும் கூடுதல் துறைகள் அல்லது தரப்பினரை, பொருந்தியவாறு, மேலதிக மீளாய்வுக்கும், தேவைப்பட்டால் விசாரணைக்கும் உட்படுத்தும்.

அனைத்து அறிக்கைகள் மற்றும் கவலைகள் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன, மேலும் அவை மிகவும் இரகசியத்தன்மையுடன் கையாளப்படும்.

நீங்கள் நேர்மைத் தடத்தை இந்த வலைத்தளம் வழியாக அணுகலாம்: https://integrityline.clariant.com அல்லது இன்ட்ராநெட்.

இந்த நெறிமுறைகள் குறியீடு தொடர்பான கேள்விகள் அல்லது எவையேனும் கவலைகளை எங்கள் இணக்க அலுவலர்களில் ஒருவருக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம் - complianceofficer@clariant.com (அநாமதேயம் அல்லாதது).

# பழிவாங்கல் நடவடிக்கையி-லிருந்து பாதுகாப்பு

கவலைகளை எழுப்பும், அல்லது சாத்தியமான அல்லது உண்மையான மீறலை முன்னிலைப்படுத்தும் எந்த ஒருவரும் சொல்வது கேட்கப்படுவதையும், அவர் ஆதரவையும், மரியாதையையும் பெறுவதையும், மற்றும் அவர்களுக்கு எதிராக பழிவாங்கல் நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது என்பதையும் உறுதி செய்வது நிர்வாக அளவுகளில் மற்றும் அதைவிடப் பெரிய அளவில் இருப்பவர்களின் பொறுப்பு ஆகும். தானாகவே சுயமாக அறிக்கை அளித்த ஒருவரை நெறிமுறைகள் குறியீட்டை மீறியதற்காக அவர்களை ஒழுங்குபடுத்துவதற்கான உரிமை எங்களுக்கு உள்ளது. பழிவாங்குதல் பொறுத்துக்கொள்ளப்படாது மற்றும் அதுவும் வேண்டுமென்றே இழிவுபடுத்தும் குற்றச்சாட்டுகள் எழுப்புதுவதும் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்டது.

# எங்கள் வழிகாட்டுதல் கோட்பாடுகள்

–
நாங்கள் ஒருவருக்கொருவரை மரியாதையுடன் நடத்துகிறோம்;

–
நாங்கள் உன்னதமான நெறிமுறைத் தரநிலைகளுக்கும், சட்டத்திற்கும் இணங்குகிறோம்;

–
நாங்கள் பாதுகாப்பிற்கு முதலிடம் தருகிறோம், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறோம்;

-
ஊழலுக்கு எதிராகப் போராட நாம் கடமைப்பட்டுள்ளோம்;

-
நாம் நம் சமூகத்தைப் பற்றி அக்கறை கொண்டு, ஒரு நல்ல கார்ப்பரேட் குடிமகனாக நடந்துகொள்கிறோம்;

-
நாங்கள் தகவல்களைக் கவனமாகக் கையாளுகிறோம்;

-
நாங்கள் பொறுப்புடன் தகவல் தொடர்பு கொள்கிறோம்;

--
நாங்கள் நமது வளங்களைப் பராமரிக்கிறோம்.

# நாங்கள் ஒருவருக்கொ-ருவரை மரியாதையுடன் நடத்துகிறோம்

நம்பிக்கை, ஒருமைப்பாடு, பாராட்டு மற்றும் மரியாதை ஆகியவை எங்கள் நிறுவனத்தையும், அதன் அனைத்து ஊழியர்களையும் பலப்படுத்துகின்றன என்று கிளாரியண்ட் -இல் நாங்கள் உறுதியாக நம்புகிறோம். எங்கள் ஊழியர்கள் அனைவருக்கும் ஊக்கமளிக்கும் மற்றும் மனநிறைவைத் தரும் பணிச்சூழலை உருவாக்க விரும்புகிறோம், ஏனெனில் இது வலுவான மற்றும் நிலையான முடிவுகளுக்கு வழிவகுக்கும். மரியாதை என்பது நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தின் மற்றும் நமது அனைத்து ஊடாடல்களின் ஒரு பகுதியாகும்.

இந்தப் பகுதியில்:

-

மக்களை நடத்தும் விதம்

தொல்லை

-

சமத்துவம் மற்றும் பாகுபாடு இல்லாமை

-

தொழிலாளர் உரிமைகளை மதித்தல்

# மக்களை நடத்துவது

**மரியாதை ஒவ்வொரு வெற்றிகரமான ஒத்துழைப்பிற்கும் அடித்தளமாக அமைகிறது. ஒவ்வொரு பணியாளருக்கும் நியாயமான பணி நிலைமைகளுக்கு மற்றும் மரியாதையாக நடத்தப்படுபவதற்கு உரிமை உண்டு. கிளாரியண்ட் -இல், வெளிப்படைத்தன்மை மற்றும் மரியாதைக்குரிய கலாச்சாரத்தை நாங்கள் பின்பற்றுகிறோம், அனைவருக்கும் வெற்றிபெறத் தேவையான நெகிழ்வுத்தன்மை, சுதந்தரம் மற்றும் அனுபவங்களை அளிக்கிறோம்.**

**எனவே, நாம் ஒவ்வொருவரும் சக ஊழியர்கள், தொழில் கூட்டாளிகள் அல்லது நாம் பணிபுரியும் வேறு எந்த நபருடனும் மரியாதையுடனும், வெளிப்படையாகவும் மற்றும் பாராட்டும் விதத்திலும் நடந்துகொள்வது நம் கடமை ஆகும். நாம் எப்போதுமே நம்மை மற்றவர்கள் எவ்வாறு நடத்த வேண்டும் என்று விரும்புவோமோ, அதே போலவும், நாம் செய்யும் செயல்களில் உன்னதமான மற்றும் தனிப்பட்ட ஒருமைப்பாட்டைக் காக்கும் விதமாகவும் மற்றவர்களை நாம் நடத்துவோம்.**

## மரியாதை

மரியாதை என்பது நம் சக பணியாளர்கள் மற்றும் அனைத்து மட்டங்களிலும், பதவிநிலைகளிலும் மற்றும் இடங்களிலும் நாம் ஒத்துழைக்கும் எவருடனும் பரஸ்பரப் பாராட்டு மற்றும் பாரபட்சமற்ற நடத்தை ஆகும்.

# துன்புறுத்தல்

**எந்த விதமான துன்புறுத்தல்களையும் கிளாரியண்ட் பொறுத்துக்கொள்வதில்லை. துன்புறுத்தும் நடத்தையைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம்.**

**துன்புறுத்தல் மற்றும் பாகுபாடு இல்லாத பணிச்சூழலுக்குப் பங்களிப்பதும், ஊக்குவிப்பதும் நம் ஒவ்வொருவரின் பொறுப்பு ஆகும். துன்புறுத்தலைச் சுட்டிக்காட்டும் எந்தவொரு நடத்தையையும் நாம் பார்த்தால், நாம் அதில் குறுக்கிடுவோம்.**

## துன்புறுத்தல்

துன்புறுத்தல் என்பது ஒரு விரும்பத்தகாத நடத்தை என விவரிக்கப்படலாம், இது ஒரு தாக்குதலான, விரோதமான, அச்சுறுத்தும் அல்லது குறுகிய மனப்பான்மையுடனான பணிச் சூழலை உருவாக்குகிறது. துன்புறுத்தல் என்பது வாய்மொழி கருத்துக்கள், உடல் முன்னேற்றங்கள், முறையற்ற பொழுதுபோக்கு அல்லது பார்வைசார்ந்த காட்சிகள் உட்பட பல வடிவங்களில் இருக்கலாம், மேலும் சக பணியாளர்கள், மேற்பார்வையாளர்கள், சப்ளையர்கள், ஒப்பந்ததாரர்கள், வாடிக்கையாளர்கள் அல்லது நமது நிறுவனத்தில் பங்கு வைத்திருக்கும் மற்றவர்களிடமிருந்து வரக்கூடும்.

தீங்கு விளைவிக்கும் பொருட்கள் மற்றும் அவதூறுகள், முறையற்ற கருத்துகள் அல்லது மற்றொரு நபரைப் பற்றிய நகைச்சுவைகள் போன்ற வார்த்தைகளை பயன்படுத்துதல் அல்லது பரப்புதல் மற்றும் மற்றொருவரின் மரியாதையைக் குறைத்தல் மற்றும் நம் பணியிடத்திற்குப் பொருந்தாதவற்றைப் பயன்படுத்துதல். துன்புறுத்தல் பாலியல் ரீதியாகவும் இருக்கலாம். விரும்பத்தகாத பாலியல்ரீதியான முன்னெடுப்புகள், பாலியல் தொடர்பான கருத்துக்கள் அல்லது நகைச்சுவைகள் போன்ற நடத்தை இதில் அடங்கும், மேலும் பணியில் இருக்கும்போது அல்லது நிறுவனத்தின் வளங்களைப் பயன்படுத்தும் போது ஆபாசப் படங்கள் அல்லது பிற பொருத்தமற்ற பொருட்களைப் பார்ப்பது அல்லது பதிவிறக்குவதும் அடங்கும்.

## கொடுமைப்படுத்துதல்/கூட்டமாகச் சுற்றிவளைத்தல்

கொடுமைப்படுத்துதல் அல்லது கூட்டமாகச் சுற்றிவளைத்தல் என்பது துன்புறுத்தலின் மற்றொரு வடிவமாகும், இது ஒரு நபரை அவமானப்படுத்துவதை அல்லது விலக்குவதை நோக்கமாகக் கொண்ட முறைமையான, நீடித்த அல்லது திரும்பத் திரும்பச் செய்யப்படும் விரோத நடத்தை என வரையறுக்கப்படுகிறது.



# 1

### கற்றல் ஆதரவு

**கேள்வி:**
எனது புதிய மேற்பார்வையாளர் மிகவும் முன் கோபக்காரராக இருப்பார் என்பது போல் தெரிகிறது. மன அழுத்தம் நிறைந்த காலங்களில், என் மேற்பார்வையாளர் மற்றவர்களுக்கு முன்னால் என்னைப் பார்த்துக் கத்துகிறார், மற்றும் பணிநீக்கம் செய்துவிடுவேன் என்று அச்சுறுத்துகிறார். அந்த நிலைமையைப் பற்றி புகாரளித்தால், எனது வேலையை இழக்க நேரிடும் என்று நான் பயப்படுகிறேன். நான் அமைதியாக இருக்க வேண்டுமா?

**பதில்:**
இல்லை, இந்த விஷயத்தைப் பற்றி நீங்கள் மனிதவள அல்லது இணக்கத்துறையைச் சேர்ந்த ஒருவரிடம் பேச வேண்டும்.

# 2

### கற்றல் ஆதரவு

**கேள்வி:**
நான் வேறொரு துறைக்கு மாறினேன், எனது புதிய குழு சகாக்கள் என்னைப் பற்றி முறையற்ற கருத்துக்களைக் கூறுகிறார்கள். அவர்கள் ஒன்றாக மதிய உணவுக்குச் செல்லும் போதெல்லாம், அவர்கள் என்னைச் சேரச் சொல்வதில்லை. குழு முழுவதும் ஸ்மார்ட்போன்களில் ஒரு குரூப் சாட்-இல் பங்கேற்கிறது என்பதையும் அறிந்தேன் ஆனால் நான் அதில் பாகமாக இல்லை. நான் விலக்கப்பட்டதாகவும், அவமானப்படுத்தப்பட்டதாகவும் உணர்கிறேன். நான் என்ன செய்யமுடியும்?

**பதில்:**
நிலைமை அனுமதித்தால், இவ்வாறு செய்வது உங்களுக்குச் சௌகரியமாக இருந்தால், உங்கள் அவதானிப்புகளை உங்கள் சகாக்களுடன் நேரடியாக அல்லது உங்கள் மேற்பார்வையாளரிடம் பகிர்ந்து கொள்ளுங்கள். மாற்றாக, HR அல்லது இணக்கத்துறையிடம் உங்கள் கவலையை எழுப்புங்கள். முறையற்ற நடத்தை பற்றி அறிந்திருக்கும் சக பணியாளர்களும் கூட தைரியமாகப் பேசவேண்டும்.

# சமத்துவம் மற்றும் பாகுபாடு இல்லாமை



**பாகுபாடு இல்லாத மற்றும் சம வாய்ப்புகளை அளிக்கும் பணியிடத்தை உறுதி செய்வதில் கிளாரியண்ட் உறுதிபூண்டுள்ளது. அனைவருக்கும் கற்றல் மற்றும் பயிற்சிக்கான வாய்ப்புகள் உள்ள அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் மாறுபட்ட சூழலை நாங்கள் ஊக்குவிக்கிறோம்.**

**இனம், இனமூலம், தேசியம், மதம், பாலினம் அல்லது பாலின அடையாளம், இயலாமை, வயது, குடியுரிமை நிலை, பாலியல் சார்பு அல்லது தொழிற்சங்கம் அல்லது அரசியல் கட்சியில் உறுப்பினராக இருத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாட்டை நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம். பணி நியமனம், இழப்பீடு மற்றும் பதவி உயர்வுச் செயல்முறைகளில், ஒவ்வொரு பணியாளருக்கும், விண்ணப்பதாரருக்கும் அவர்களின் தனிப்பட்ட திறன்கள், சாமர்த்தியங்கள், செயல்திறன் மற்றும் ஆற்றல் ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே கையாளப்படுவதற்கான உரிமை இருக்கும்.**

# 1

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
நான் வேறொரு அணியில் ஒரு பதவிக்கு விண்ணப்பித்தேன், ஆனால் அது என்னை விடக் குறைந்த தகுதி வாய்ந்த ஒரு நபருக்கு வழங்கப்பட்டதாகத் தெரிந்துகொண்டேன். பணி நியமன மேலாளர் எனது இயலாமை பற்றி அறிந்திருந்ததே காரணம் என்று நான் நினைக்கிறேன். நான் என்ன செய்யவேண்டும்?

**பதில்:**
கிளாரியண்ட் -இல், பணிநியமன முடிவுகள் சார்பில்லாத அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டவை. நீங்கள் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டதாக நீங்கள் சந்தேகித்தால், பணிநியமன முடிவுக்கு வழிவகுத்த காரணங்களை பணிநியமன மேலாளருடன் தெளிவுபடுத்த முயற்சி செய்யவும். உங்களுக்கு ஒரு நியாயமான பதில் கிடைக்கவில்லை என்றால், தைரியமாகப் பேசுங்கள் மற்றும் மனிதவளத்துறையிடம் உங்கள் கவலையை எழுப்புங்கள்.

# 2

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
நான் பல ஆண்டுகளாக நிறுவனத்தில் இருக்கிறேன், எனது வருடாந்தரச் செயல்திறன் மதிப்பீடுகள் எப்போதும் குறைந்தபட்சம் முழுமையாகத் திருப்திகரமாக இருந்தன. கடந்த ஆண்டின் இறுதியில் இருந்து எனக்கு ஒரு புதிய மேற்பார்வையாளர் இருக்கிறார், இப்போது அவர் எனது செயல்திறனை உண்மை அடிப்படையிலான வாதங்கள் இல்லாமல் ‘முன்னேற்றம் தேவை’ என்று மதிப்பிட்டுள்ளார். நான் இதற்குச் சவால விட்டு எதிர்க்க வேண்டுமா?

**பதில்:**
கிளாரியண்ட் -இல், செயல்திறன் மீளாய்வு செயல்முறை உண்மைகள் மற்றும் ஆக்கபூர்வமான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டது. அனைத்து ஊழியர்களுக்கும் நியாயமான செயல்திறன் மதிப்பாய்வுக்கான உரிமை உண்டு. பொருத்தமற்ற மதிப்பீட்டு அளவுகோல்கள் இருந்தால், அதைப் பற்றி தெளிவுபெற நீங்கள் உங்கள் மேற்பார்வையாளருடன் பேச வேண்டும் அல்லது மனிதவளத்துறையிடம் உங்கள் கவலையை எழுப்ப வேண்டும்.

# தொழிலாளர் உரிமைகளை மதித்தல்

எல்லா நேரங்களிலும் சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் நெறிமுறைத் தரநிலைகளுக்கு அனைத்துச் செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் முழுவதிலும் இணக்கமாக இருப்பதற்கு கிளாரியண்ட் முயற்சி செய்கிறது; குறிப்பாகச் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ILO) வகுத்துள்ள அடிப்படைப் பணி உரிமைகள் தொடர்பான கொள்கைகளை கிளாரியண்ட் அங்கீகரிக்கிறது:

-

சங்கமாகக் கூடுவதற்கான சுதந்தரம் மற்றும் கூட்டு பேரம் பேசுவதற்கான உரிமை;

-

கட்டாயத் தொழிலாளர்கள் கூடாது;

-

குழந்தைத் தொழிலாளர்கள் கூடாது;

-

பாகுபாடு கூடாது.

கிளாரியண்ட் -க்காகப் பணி புரிவது என்பது அவரவர் விருப்பத்துக்குரிய விஷயம். எந்தவொரு கட்டாயத் தொழிலாளர்கள், குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் மனிதர்களைக் கடத்துதல் ஆகியவற்றை நாங்கள் கண்டிக்கிறோம், அதற்கு எதிராக நாங்கள் செயலூக்கத்துடன் செயல்படுகிறோம்.

வயது சரிபார்க்கக்கூடியவாறு இருப்பதையும், வேலை செய்யும் வயது தொடர்பான சட்டத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுவதையும் உறுதிசெய்ய கிடைக்கக்கூடிய எல்லாச் செயல்முறைகளையும் நாங்கள் பயன்படுத்துகிறோம்.

→ **இதையும் பார்க்கவும்**
மனித உரிமைகளை மதித்தல்

# 1

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
எனது சக பணியாளர் ஊழியர் ஒரு திட்டத்தில் பணிபுரியப் பரிசீலித்து வருகிறார், அந்த ஒப்பந்ததாரர் குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்துவதாக அறியப்படுவதாகச் செய்திகளில் படித்தேன். நான் அந்தத் திட்டத்தில் பணிபுரியவில்லை. நான் ஏதாவது கூறவேண்டுமா?

**பதில்:**
ஆம். உங்கள் அவதானிப்புகளை உங்கள் சகப் பணிளாளருடன் பகிர்ந்து கொள்ளுங்கள், இந்த சப்ளையருடன் பணிபுரிய அவர்கள் வற்புறுத்தினால், தைரியமாகப் பேசுங்கள். குழந்தைத் தொழிலாளரைப் பயன்படுத்தும் வரலாற்றைக் கொண்ட ஒரு கூட்டாளரைத் தேர்ந்தெடுப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது மற்றும் தவிர்க்கப்பட வேண்டும். குழந்தைத் தொழிலாளர்களைப் பயன்படுத்திய வரலாறு இருந்து, தொழில் கூட்டாளர் அதை நிறுத்திவிட்டதாகக் கூறும் பட்சத்தில், இது உண்மை தானா என்பதை நாங்கள் சரிபார்க்க வேண்டும்.

# 2

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
ஒரு சக ஊழியர் ஒரு பணியாளர்கள் மன்றத்தை ஏற்படுத்த விரும்புகிறார். அவ்வாறு செய்தால், அவர்களைப் பணிநீக்கம் செய்யப்போவதாக மேற்பார்வையாளர் அச்சுறுத்துகிறார். அவரால் அவ்வாறு செய்ய முடியுமா?

**பதில்:**
ஐ.எல்.ஓ.வின் நான்கு அடிப்படைக் கொள்கைகளின்படி சங்கமாக ஒன்றுகூடும் சுதந்தரத்தை கிளாரியண்ட் அங்கீகரிக்கிறது. எனவே, உங்கள் சகப் பணியாளருக்கு எதிராகத் தடுப்பு நடவடிக்கைக்கு எந்த முகாந்திரமும் இல்லை.

# 3

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
நான் வளர்ந்து வரும் சந்தையில் ஒரு தொழில் பயணத்தில் இருக்கிறேன், இப்பகுதியில் உள்ள எங்கள் முக்கிய சப்ளையர்களில் ஒருவரின் தொழிற்சாலையைப் பார்வையிடுவதற்காகச் செல்கிறேன். சில தொழிலாளர்கள் மிகவும் இளவயதினவராகக் காணப்படுகிறார்கள், அவர்கள் சட்டப்படியான வயதைவிடக் குறைந்த வயதினராக இருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. நான் என்ன செய்யவேண்டும்?

**பதில்:**
தொழிற்சாலை மேலாளருடன் உங்கள் கவலைகளை நேரடியாகத் தெளிவுபடுத்திக்கொள்ள முயற்சி செய்யவும். அனைத்துத் தொழிலாளர்களும் குறைந்தபட்ச வயது வரம்பைப் பூர்த்தி செய்கிறார்கள் என்று அவர்கள் உங்களுக்கு உறுதியளித்தால், இந்த உறுதிப்பாட்டை எழுத்துப்பூர்வமாகப் பெறுவதை உறுதிசெய்துகொள்ளவும். எப்படி இருந்தாலும், உங்கள் கவலைகளை உங்கள் மேற்பார்வையாளர், மனிதவள மேம்பாடு மற்றும் இணக்கத்துறையிடம் எழுப்புவதன் மூலம் நிறுவனத்திற்குள் அவற்றை எடுத்துச்செல்லுங்கள்.

# நாங்கள் உன்னதமான நெறிமுறைத் தரநிலைகளு-க்கும், சட்டத்திற்கும் இணங்குகி-றோம்

சட்டங்கள் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கின்றன மற்றும் அவை சமூகத்தில் எதிர்பார்க்கப்படும் நடத்தைகளின் குறைந்தபட்சத் தரங்களுக்கான வழிகாட்டியாகும். சர்வதேச அளவில் செயல்படும் நிறுவனமான நாம், நமது பங்குதாரர்களின் நம்பிக்கையைப் பெறுவதற்கும், நமது நற்பெயரை வளர்ப்பதற்கும், நல்ல நிலையான தொழிலை ஆதரிப்பதற்கும், நெறிமுறைகள் மற்றும் ஒருமைப்பாட்டின் மிக உயர்ந்த தரத்தின்படிச் செயல்படுவதை கிளாரியண்ட் உறுதி செய்கிறது. இணங்காமல் செயல்படுவதன் விளைவுகளில் அதிக அபராதம் மற்றும் சில சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு சிறைத்தண்டனை, அத்துடன் நற்பெயருக்குத் தீவிரமான சேதம் ஆகியவை அடங்கும்.

நாங்கள் அனைத்துச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகள், நமது நெறிமுறைகள் குறியீடு, உள்-கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களுடனும், அத்துடன் கிளாரியண்ட் கடைபிடிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ள தொடர்புடைய அனைத்து இரசாயனத் தொழில் குறியீடுகளுடனும் இணக்கமாகச் செயல்படுகிறோம்.

**இந்தப் பகுதியில்:**

-
நியாயமான போட்டி
-
மோசடி
-
உள் வர்த்தகம்
-
பணமோசடி
-
வணிகத்தடை மற்றும் வர்த்தகக் கட்டுப்பாட்டு அம்சங்கள்

# நியாயமான போட்டி

கிளாரியண்ட் சுதந்தரமான மற்றும் நியாயமான போட்டியை நம்புகிறது மற்றும் அதன் வாடிக்கையாளர்கள் மற்றும் சப்ளையர்களுடன் நியாயமான முறையில் செயல்படுகிறது. நாங்கள் எங்கள் தயாரிப்புகளின் செயல்திறன் மற்றும் சிறப்புகளின் மூலம் போட்டியில் சாதகத்தன்மையை நாடுகிறோம், ஆனால் நெறிமுறையற்ற அல்லது சட்டவிரோத வணிக நடைமுறைகள் மூலம் அல்ல.

நம்பிக்கை-எதிர்ப்பு மற்றும் நியாயமான-வர்த்தகச் சட்டங்கள் ஆகியவை போட்டியை ஊக்குவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன, நுகர்வோர் பரந்த அளவிலான தயாரிப்புத் தேர்வுகள் மற்றும் புதுமையான தீர்வுகளிலிருந்து பயனடைவதை உறுதிசெய்கின்றன. நம் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் வெற்றியின் மூலம் நம் பணி மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்தும் புதுமைகள் வெற்றி பெறுவதை அவை உறுதிப்படுத்துகின்றன.



**கிளாரியண்ட் -இல் நாங்கள் இந்தச் சட்டங்களைக் கண்டிப்பாகப் பின்பற்றுகிறோம். இதன் பொருள், இது போட்டியைக் கட்டுப்படுத்தும் என்றால், நாம் எந்த மூன்றாம் தரப்பினருடனும் தொழில் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள மாட்டோம் என்பதாகும். எனவே நாங்கள் ஒரு முறையான வணிக நோக்கத்துடன் மட்டுமே தகவல்களைப் பரிமாறிக்கொள்கிறோம் மற்றும் போட்டியாளர்களுடன் போட்டி சார்ந்த முக்கியமான தகவல்களைப் பகிர்ந்து கொள்ள மாட்டோம். எங்கள் வணிக உத்திகள், கொள்கைகள், வணிக நடத்தை மற்றும் குறிப்பாக எங்கள் விலை நிர்ணயம் ஆகியவற்றை நாங்கள் தான் தீர்மானிக்கிறோம். இந்த விஷயங்களில் நாங்கள் நேரடியாகவோ, மூன்றாம் தரப்பு வழியாகவோ போட்டியாளர்களுடன் கூட்டு சேர்வதில்லை. மேலும், நாங்கள் எங்கள் போட்டியாளர்களுடன் வாடிக்கையாளர்கள், பிரதேசங்கள் மற்றும் தயாரிப்புச் சந்தைகளை விவாதிக்கவோ, ஒப்புக்கொள்ளவோ அல்லது ஒதுக்கவோ மாட்டோம்.**

**கிளாரியண்ட் -இன் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் வாடிக்கையாளர்களுக்கு மதிப்புவாய்ந்த தேர்வுகளை வழங்கக்கூடும் என்றாலும், நியாயமற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் எங்கள் சந்தை வலிமையை அல்லது ஆதிக்கம் செலுத்தும் சந்தை நிலையை நாங்கள் ஒருபோதும் துஷ்பிரயோகம் செய்யமாட்டோம்.**

**ஒரு குறிப்பிட்ட மூன்றாம் தரப்பு ஒரு போட்டியாளரா என்பது எங்களுக்குச் சந்தேகமாக இருந்தால் அல்லது உறுதியாக தெரியவில்லை என்றால், அல்லது மேலே பட்டியலிடப்பட்ட சூழ்நிலைகளில் ஏதேனும் ஏற்பட்டால் அல்லது எழக்கூடும் என்றால், நாம் சட்டத்துறையைத் தொடர்பு கொள்ளவேண்டும்.**

## போட்டியாளர்

இதே தொடர்புடைய தயாரிப்புச் சந்தையில் செயலூக்கமாக இருக்கும் எந்த நிறுவனமும் (அல்லது நபரும்) ஒரு போட்டியாளர் ஆவார். ஒரே மாதிரியான சந்தைகளில் அல்லது அதே அல்லது அதுபோன்ற சந்தையில் உள்ள மற்ற இடங்களில் செயலூக்கமுள்ள உள்ள ஒரு நிறுவனம் (அல்லது நபர்) ஒரு போட்டியாளராகக் கருதப்படலாம். எங்கள் தயாரிப்புகளை விற்கும் ஒரு விநியோகஸ்தர் குறைந்தபட்சம் விநியோக மட்டத்திலாவது ஒரு போட்டியாளர் என்பதை நினைவில் கொள்க. கிளாரியண்ட் போலவே அதே தயாரிப்புகளை மூலவளமாகக் கொண்ட ஒரு சப்ளையர் மேல்நோக்கிய வாங்கும் சந்தையில் ஒரு போட்டியாளர் ஆவார்.

## போட்டிரீதியாக உணர்திறன் கொண்ட தகவல்

ஒரு எளிய விதியாக, பொதுத் தளத்தில் இல்லாத, இரகசியமான அல்லது ஒரு (சாத்தியமான) போட்டியாளரின் உத்திசார்ந்த நடத்தையைப் பாதிக்கக்கூடிய தகவல்கள் போட்டிரீதியாக உணர்திறன் கொண்ட தகவல்கள் ஆகும். இதில் பின்வரும் தகவல்கள் உள்ளடங்குகின்றன

(i) மற்ற தரப்புகளின் எதிர்காலப் போட்டி நடத்தையைப் பாதிக்கும் தகவல்,
(ii) உங்கள் வணிகம் அல்லது உத்தியைப் பற்றி ஒரு போட்டியாளர் தெரிந்து கொள்ளக்கூடாது என்று நீங்கள் விரும்பும் தகவல் அல்லது
(iii )ஒரு வாடிக்கையாளர் அல்லது சப்ளையர் மூன்றாம் தரப்புடன் நீங்கள் பகிர்ந்து கொள்ளக்கூடாது என்று விரும்பும் தகவல்.

→ **இதையும் பார்க்கவும்**
தகவல் பாதுகாப்பு
உள் வர்த்தகம்
ஊடக உறவுகள் மற்றும் முதலீட்டாளர் உறவுகள்

# 1

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
நான் விற்பனைத் துறையில் பணிபுரிகிறேன், பல்வேறு மூலப்பொருட்கள் மற்றும் இரசாயனங்களின் விலை மற்றும் விலையின் போக்குகள் குறித்த சப்ளையர்களிடமிருந்து கிடைக்கும் தரவுகள் உட்பட ஒரு விரிவான மாதாந்தர அறிக்கையை எங்கள் கொள்முதல் குழுவிலிருந்து நான் பெறுகிறேன். இந்த சப்ளையர்களில் சிலர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில தயாரிப்புகளுக்காக கிளாரியண்ட் கீழ்நோக்கிய நிலைக்குப் போட்டியிடுகின்றனர். இதுபோன்ற தகவல்களை நான் பெற வேண்டுமா என்று எனக்குத் தெரியவில்லை, மேலும் தரவு எங்கிருந்து வருகிறது என்று கூட நான் வியந்து யோசித்துக்கொண்டிருக்கிறேன். நான் அதைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

**பதில்:**
நீங்கள் விற்பனைத் துறையில் இருப்பதால், மூலப்பொருட்கள் மற்றும் இரசாயனங்கள் கொள்முதல் செய்வதிலிருந்து பொதுவான ஒருங்கிணைந்த தரவைப் பெறலாம், ஆனால் கிளாரியண்ட் விற்கும் தயாரிப்புகள் மீது தனிப்பட்ட சப்ளையர் தரவை நீங்கள் பெறக்கூடாது. கிளாரியண்ட் பயன்படுத்தும் அனைத்துத் தரவுகளும், தகவல்களும் எப்போதும் முறையான மூலத்திலிருந்து வந்திருக்க வேண்டும், சட்டவிரோதத் தொடர்புகளிலிருந்து அல்ல. போட்டியாளர்களிடமிருந்து கிளாரியண்ட் பொருட்களை வாங்கலாம், ஆனால் பரிமாறிக்கொள்ளப்படும் தகவல்கள் முற்றிலும் குறைந்தபட்சமாக வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும், கொள்முதல் துறையிடம் உள்ள இந்த கொள்முதல் தகவல்கள் விற்பனைத் துறைக்கு அனுப்பப்படக்கூடாது. சந்தேகம் இருந்தால், நீங்கள் எப்போதும் தரவின் மூலத்தைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும், மேலும் உங்களுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை என்றால், வழிகாட்டுதலுக்குச் சட்டத்துறையை அணுகலாம். கேள்விகளைக் கேட்க அல்லது சட்ட ஆலோசனையைக் கேட்க அனைவருக்கும் கடமையும், உரிமையும் உள்ளது.

# 2

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
நான் ஒரு தொழில்துறை மாநாட்டில் இருக்கிறேன், அங்கு நான் ஒரு முன்னாள் சகப் பணியாளரைச் சந்திக்கிறேன். கடினமான சந்தைச் சூழல் மற்றும் சாத்தியமான நடவடிக்கைகள் குறித்து முறைசாராக் கலந்துரையாடல்களுக்காக தொழில்துறையைச் சேர்ந்தவர்களுடன் சேர்ந்து ஒரு விருந்தில் கலந்து கொள்ள விரும்புகிறீர்களா என்று அவர் என்னிடம் கேட்கிறார். எனது விற்பனை இலக்குகளை அடைய எனக்கு அழுத்தம் உள்ளது. நான் விருந்தில் கலந்துகொண்டு, நிலைமையை மேம்படுத்த முடியுமா என்று பார்க்க வேண்டுமா?

**பதில்:**
நீங்கள் விருந்தில் கலந்து கொள்ளக்கூடாது. முறைசாராத் தகவல் பரிமாற்றங்களில் எப்போதும் எச்சரிக்கையாக இருங்கள். உங்கள் தொழில் நடத்தையைப் பற்றி நீங்கள் தொழில்துறையைச் சேர்ந்தவர்களுடன் பேசக்கூடாது. இது சட்டவிரோதமானது. இது ஒருபோதும் கண்டுபிடிக்கப்படாது என்று நீங்கள் நினைத்தாலும் அல்லது கடினமான சந்தைச் சூழலைச் சமாளிக்க அல்லது வணிக இலக்குகளை அடைய உதவும் நுண்ணறிவுகளைப் பெறலாம் என்று நினைத்தாலும், இதுபோன்ற நடத்தை கிளாரியண்ட்-இல் பொறுத்துக்கொள்ளப்படாது, மேலும் நமது நிறுவனத்திற்கும், உங்களுக்கும் அது தீங்கு விளைவிக்கும்.

# மோசடி

நம் நடத்தை மற்றும் நாம் செய்யும் எல்லாவற்றிலும் நேர்மை முக்கியமானது மற்றும் நமது தொழில் கூட்டாளர்களால் அது மதிக்கப்பட வேண்டும் மற்றும் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். நாங்கள் உருவாக்கும் அல்லது வழங்கும் கிளாரியண்ட்டைப் பற்றிய அல்லது தொடர்புடைய எந்தத் தகவலும் துல்லியமாக இருக்க வேண்டும் மற்றும் உண்மையைப் பிரதிபலிக்க வேண்டும். நாங்கள் எந்தவிதமான மோசடி நடவடிக்கையையும் தொடங்குவதில்லை அல்லது அதில் பங்கேற்பதில்லை.

அதனால், நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் கணினிகளில் சரியான மற்றும் துல்லியமான தகவல்களை உள்ளிடுகிறோம் என்பதையும், செயல்முறைகள் மற்றும் பரிவர்த்தனைகளை உண்மையாக ஆவணப்படுத்துகிறோம் என்பதையும் உறுதி செய்வோம். சட்டத்தால் தேவைப்பட்டால் தவிர அல்லது எங்கள் பதிவுகளை வைத்திருத்தல் திட்டங்களுக்கு இணங்க, நாங்கள் பரிவர்த்தனைப் பதிவுகளை மாற்றவோ, அழிக்கவோ மாட்டோம். சோதனையிலிருந்து தரவுகளை அல்லது முடிவுகளை நாங்கள் கையாளவோ அல்லது தவறாக மாற்றவோ மாட்டோம்.

இது மோசடிகளைத் தடுக்கவும் கண்டறியவும் உதவுகிறது, மற்றும் நம் தரவுகளில் நேர்மையை உறுதி செய்கிறது. மோசடியை மூடிமறைப்பதில் நாங்கள் ஈடுபடவில்லை என்பதை உறுதிசெய்கிறோம். சந்தேகத்திற்கிடமான தகவல், பரிவர்த்தனைகள் அல்லது செயல்பாட்டை இணக்கத்துறை அல்லது சட்டத்துறைக்கு உடனடியாகத் தெரிவிக்கிறோம்.

பெரும்பாலான இடங்களில், மோசடி என்பது சம்பந்தப்பட்ட நபர்களுக்கான தனிப்பட்ட பொறுப்புடன் கூடிய ஒரு குற்றமாகும்.

## மோசடி

மோசடி என்பது நிதி நன்மை அல்லது பிற நன்மைகளை விளைவிக்கும் நோக்கம் கொண்ட எந்தவொரு ஏமாற்று வேலை, வேண்டுமென்றே எடுக்கப்படும் அல்லது தவிர்க்கப்படும் நடவடிக்கை ஆகும். இதில் உள்ளடங்குபவை, ஆனால் இவை மட்டுமே அல்ல:

- போலியானது;
- நீங்கள் பொதுவாக அணுக முடியாத தகவலைப் பெறுவதற்குப் பொய் சொல்வது அல்லது ஏமாற்றுவது;
- நிறுவனத்தின் சொத்தைத் திருடுவது;
- வேண்டுமென்றே தவறாக வழிநடத்தும் தகவல் வழங்கல்
- வேலை நேரப் பதிவுகள் அல்லது செலவு அறிக்கைகள் போன்ற நிறுவனப் பதிவுகளைத் தவறாக மாற்றுதல்;
- சோதனை முடிவுகளை மாற்றுதல்;
- மற்றவர்களை ஏமாற்றும் நோக்கத்துடன் உண்மைகளை வேண்டுமென்றே அழித்தல் அல்லது மறைத்தல்;
- கற்பனையான அல்லது தவறாக வழிநடத்தும் பதிவுகளைப் பதிவு செய்தல்;
- நிதி அல்லது பிற நிறுவனச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துதல்;
- மோசடியைப் பற்றித் தெரிந்திருக்கும் போது செயல்படத் தவறுதல்/ஏற்றுக்கொள்வது;
- லஞ்சம்.

→ **இதையும் பார்க்கவும்**
துல்லியமான புத்தகங்கள் மற்றும் பதிவுகள்
பண மோசடி (மணி லாண்டரிங்)
லஞ்சம் மற்றும் ஊழல்

# 1

### கற்றல் ஆதரவு

**கேள்வி:**
நான் ஒரு தொழில் பயணத்திலிருந்து திரும்பி வந்தேன், எனது செலவு அறிக்கையை உருவாக்கும் போது, எனது உள்ளூர்க் குழுவுடன் சேர்ந்து இரவு உணவருந்திய உணவகத்தில் இருந்து இரசீதை எடுக்க மறந்துவிட்டேன் என்பதை உணர்ந்தேன். நாங்கள் என்ன சாப்பிட்டோம் என்பது எனக்குத் தோராயமாக நினைவில் இருக்கிறது. நான் எக்செல் தாளில் உணவைப் பட்டியலிட்டு இரசீது போலப் பயன்படுத்தலாமா?

**பதில்:**
இல்லை, உங்களால் உருவாக்கப்பட்ட இரசீதுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. செலவுகளை எவ்வாறு திருப்பிப் பெறமுடியும் என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள உங்கள் மேற்பார்வையாளர் மற்றும் நிதியாளரிடம் பேசுங்கள்.

# உள் வர்த்தகம்

**கிளாரியண்ட் -இல், நம் நிறுவனத்துடன் தொடர்புடைய எந்தவொரு பங்கு விலை தொடர்பான தகவல்களையும் பற்றி அனைத்துக் கூட்டாளிகள், பங்குதாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு ஒரே நேரத்தில் தெரிவிக்கப்படுவதை நாங்கள் உறுதிசெய்கிறோம்.**

**எனவே, கிளாரியண்ட் பற்றிய இரகசியத் தகவல்களை நாம் ஒருபோதும் தனிப்பட்ட நலனுக்காக பயன்படுத்தக்கூடாது. ஒரு நிறுவனத்தைப் பற்றிய உள்-தகவல்களை வைத்திருக்கும் போது நாம் ஒருபோதும் அந்த நிறுவனத்தில் பங்குகளை வாங்கவோ, விற்கவோ கூடாது.**

**அத்தகைய தகவல்களை நாங்கள் வேறு யாருக்கும் அனுப்புவதில்லை. குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஒரே வீட்டிலுள்ள பிற குடியிருப்பாளர்கள், சகாக்கள், நண்பர்கள், பத்திரிகையாளர்கள், வாடிக்கையாளர்கள், நிதி ஆய்வாளர்கள் மற்றும் ஆலோசகர்கள் இதில் அடங்குவார்கள் - ஆனால் இவர்கள் மட்டுமே அல்லர். சந்தேகம் இருந்தால், நாம் சட்டத்துறையை அணுகவேண்டும்.**

**உள்-தகவல்**

உள்-தகவல் என்பது பங்கு விலைகள் அல்லது பிற நிதிக் கருவிகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பொதுமக்களுக்குத் தெரியாத அனைத்து தகவல்களும் ஆகும். இதில், திட்டமிடப்பட்ட கையகப்படுத்துதல், முதலீட்டைக் குறைத்தல், மூலோபாயக் கூட்டணிகள், நிதி முடிவுகள், புதிய தயாரிப்புகள், புதிய தயாரிப்புப் பொருள் வளர்ச்சி அல்லது உத்தி, மூலதனக் கட்டமைப்பில் மாற்றங்கள், முக்கிய ஒப்பந்தங்கள் அல்லது நிர்வாகத்தில் ஏற்படும் மாற்றங்கள் குறித்த இரகசியத் தகவல்கள் அடங்கும்.

→ **கொள்கைகள்**
உள்-வர்த்தகக் கொள்கை

→ **இதையும் பார்க்கவும்**
துல்லியமான புத்தகங்கள் மற்றும் பதிவுகள்
தகவல் பாதுகாப்பு
தரவுத் தனியுரிமை

# 1

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
கிளாரியண்ட் -இன் வரவிருக்கும் விற்பனைப் புள்ளிவிவரங்கள் பற்றிய முன்னறிவிப்பு தகவல்களைக் கொண்ட ப்ரின்டருக்கு அருகில் ஒரு ப்ரின்ட் செய்யப்பட்ட காகிதத்தை நான் பார்த்தேன். அதை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது?

**பதில்:**
நீங்கள் ஒரு ஷ்ரெட்டரைக் கொண்டு அந்தக் காகிதத்தை அழிக்க வேண்டும் அல்லது உடனடியாக ஓர் இரகசியக் கழிவுக் கூடையில் அதை அப்புறப்படுத்த வேண்டும். இந்த ப்ரின்ட் செய்யப்பட்ட காகிதம் பங்கு விலை-தொடர்பான தகவல்களைக் கொண்டுள்ளது, எனவே இது மிகவும் இரகசியத்தன்மையுடன் நடத்தப்பட வேண்டும். ப்ரின்டரை அணுகக்கூடியவர்களிடையே இரகசியத் தகவல்களைப் பாதுகாப்பதில் தனிப்பட்ட பொறுப்புணர்வைத் தெரிவிப்பதன் அவசியத்தை அடையாளம் காண உங்கள் மேற்பார்வையாளருடன் பேசுங்கள். ப்ரின்ட் செய்யப்பட்ட காகிதத்தின் உள்ளடக்கங்களை யாருடனும் பகிர்ந்து கொள்ளாதீர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விற்பனைப் புள்ளிவிவரங்கள் அதிகாரப்பூர்வமாகப் பகிரங்கப்படுத்தப்படும் வரை கிளாரியண்ட் பங்குகளில் வர்த்தகம் செய்வதைத் தவிர்க்கவும்.

# 2

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
ஒரு உள்ளூர் டவுன்ஹால் கூட்டத்தில், தலைவர்களில் ஒருவர், கிளாரியன்ட் அதன் காலாண்டு முடிவுகள் சிறப்பாக இருக்கப் போவதில்லை என்பதால் குறிப்பிடத்தக்க அழுத்தத்தில் இருப்பதாகக் குறிப்பிடுகிறார், மேலும் நிலைமையை மேம்படுத்துவதற்கு நாம் ஒவ்வொருவரும் கடுமையாகச் சிரமப்பட வேண்டியிருக்கும் என்று கூறுகிறார். இது எனக்கு நல்லதாகப் படவில்லை, காலாண்டு முடிவுகள் வெளியிடப்படுவதற்கு முன்பு எனது கிளாரியண்ட் பங்குகளை விற்பனை செய்யலாம் என்று நான் நினைக்கிறேன். நான் அப்படிச் செய்வது சரிதானா?

**பதில்:**
இல்லை, அப்படி நீங்கள் செய்வது சரியல்ல. நீங்கள் பொதுவெளியில்-இல்லாத மற்றும் (சாத்தியமான) பங்கு விலையைப் பாதிக்கக்கூடிய தகவல்களை வைத்திருந்தால், வர்த்தகச் சந்தையில் தனிப்பட்ட நன்மைகளைப் பெற நீங்கள் அத்தகைய தகவல் அறிவைப் பயன்படுத்தக்கூடாது. மேலும், உங்கள் சார்பாக வர்த்தகம் செய்ய வேறு ஒருவரிடம் நீங்கள் கேட்கக்கூடாது. உள்-வர்த்தகம் ஒரு கிரிமினல் குற்றமாகும், மேலும் இதற்குச் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அதிக அபராதம் மற்றும் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம். கூட்டத்தில் பங்கேற்ற மற்றவர்களும் உள்-நபர்களாக இருப்பதால் நீங்கள் சட்டத்துறையைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

# பண மோசடி (மணி லாண்டரிங்)

**மணி லாண்டரிங் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதற்கு எதிரான சர்வதேசப் போராட்டத்தில் கிளாரியண்ட் உறுதிபூண்டுள்ளது.**

**மணி லாண்டரிங் தடை தொடர்பான அனைத்துச் சட்டங்களுக்கும் கிளாரியண்ட் இணக்கமாக உள்ளது. மணி லாண்டரிங் என அடையாளம் காணக்கூடிய செயல்களில் ஈடுபடவோ, அதைப் பொறுத்துக்கொள்ளவோ நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.**

**பண மோசடி (மணி லாண்டரிங்)**
மணி லாண்டரிங் என்பது குற்றச் செயல்களிலிருந்து உருவாகும் பணத்தை, சட்டப்பூர்வமாகப் பெறப்பட்டதாகத் தோன்றச்செய்து வழக்கமான பொருளாதாரத்தில் அறிமுகப்படுத்துவதைக் குறிக்கிறது.. இதற்கு நம் ஊடாடல்களில் விழிப்புணர்வு தேவை. ஒரு மூன்றாம் தரப்பினரின் செயல் மூலம் மறைமுகமாக ஈடுபடுவதற்கும் இது பொருந்தும்.

→ **இதையும் பார்க்கவும்**
துல்லியமான புத்தகங்கள் மற்றும் பதிவுகள்
லஞ்சம் மற்றும் ஊழல்
மோசடி

# 1

**கற்றல் ஆதரவு**

**கேள்வி:**
நான் ஒரு மூன்றாம் தரப்பு விநியோகஸ்தருடன் நீண்ட காலமாகப் பணியாற்றி வருகிறேன், சமீபத்தில் அவர்கள் மணி லாண்டரிங்கில் ஈடுபட்டதாகப் பல வதந்திகளைக் கேட்டேன். நான் அவர்களுடன் தொடர்ந்து பணியாற்றலாமா?

**பதில்:**
வதந்திகளைப் பற்றி அறிந்துகொண்டவுடன், நிலைமையை மற்றும் அதன் சாத்தியமான பொறுப்புகளை நன்கு புரிந்துகொள்ள சட்ட அல்லது இணக்கத்துறையைத் தொடர்பு கொள்ளுங்கள். மூன்றாம் தரப்பினரின் நேர்மை குறித்த உறுதிப்பாட்டைப் பெற அல்லது குற்றச்சாட்டுகளை நிரூபிக்க விரிவாக மதிப்பீடு செய்யச் சட்டத்துறை அல்லது இணக்கத்துறை உங்களுக்கு உதவும். வதந்திகளைப் புறக்கணிப்பதும், வழக்கம் போல் பணியைத் தொடர்வதும் தவறான நடத்தை ஆகும்.

# தடை மற்றும் வர்த்தகக் கட்டுப்பாட்டு விதிகள்

கிளாரியண்ட் உலகளாவிய வணிக உறவுகளைக் கொண்டுள்ளது மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகளின் உலகளாவிய வர்த்தகத்தில் தினமும் ஈடுபட்டுள்ளது.

நாங்கள் எங்கு வியாபாரம் செய்தாலும், பொருந்தக்கூடிய அனைத்துத் தேசிய மற்றும் சர்வதேச ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் வர்த்தக இணக்க சட்டங்களுக்கும் இணங்குகிறோம். பொருட்களின் இறக்குமதி, ஏற்றுமதி அல்லது உள்நாட்டு வர்த்தகம் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் தடைகள் இதில் அடங்கும்.

பொருட்களின் தன்மை, தயாரிக்கப்பட்ட நாடு அல்லது இறுதியாகப் பயன்படுத்தப்படும் நாடு, வாடிக்கையாளரின் அடையாளம் அல்லது மூன்றாம் தரப்புச் சேவை வழங்குநர் அல்லது வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பணியாளர் ஆகியவர்களைப் பொறுத்துக் கட்டுப்பாடுகள் இருக்கும். பொருட்களுக்கு மட்டுமே அல்லாமல், தொழில்நுட்பங்கள் மற்றும் சேவைகள் மற்றும் மூலதனம் மற்றும் கட்டணப் பரிவர்த்தனைகளுக்கும் இதே போன்ற கட்டுப்பாடுகள் பொருந்தக்கூடும்.

**சரக்குகளை வாங்கும்போது, உற்பத்தி செய்யப்படும்போது, விற்கப்படும்போது அல்லது இடம் மாற்றப்படும்போது, தொழில்நுட்பங்கள் மாற்றப்படும்போது அல்லது கையகப்படுத்தப்படும்போது பொருந்தக்கூடிய வர்த்தகக் கட்டுப்பாட்டு விதிமுறைகளுக்கு நாங்கள் இணங்குகிறோம். இரட்டைப் பயன்பாட்டுத் தயாரிப்புகளைக் கையாளுதல், பயங்கரவாதம் மற்றும் இரசாயன ஆயுதங்களை எதிர்ப்பது தொடர்பான விதிமுறைகளையும் நாங்கள் பின்பற்றுகிறோம்.**



# 1

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
ஒரு விநியோகஸ்தர் கிளாரியண்ட் -இன் தயாரிப்புகளில் ஒன்றில் ஆர்வமாக உள்ளார். பெரும்பாலும், இந்தத் தயாரிப்பு ஈரானுக்கு வழங்கப்படுகிறது, மேலும் பொருளாதாரத் தடைகள் உள்ளன என்பதை நான் அறிந்திருப்பதால், விநியோகஸ்தரிடம் அவர்களின் இறுதி வாடிக்கையாளரைப் பற்றிக் கேட்கிறேன். எனக்குத் தெளிவான பதில் கிடைக்கவில்லை. நான் கூடுதலாக விளக்கம் பெற வேண்டுமா, அல்லது விற்பனையைத் தொடரலாமா?

**பதில்:**
தடை விதிக்கப்பட்ட நாடுகளுக்குச் சாத்தியமான விநியோகங்களைக் கையாளும் போது, நாம் இணக்கமாக இருப்பதை உறுதிப்படுத்த எப்போதுமே இணக்கத்துறை மற்றும் சுங்கம் மற்றும் வெளிநாட்டு வர்த்தகத்துறையை அணுகவும். எந்த விற்பனையும் செய்யப்படுவதற்கு முன்னர் இந்த விஷயத்தை மேலும் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்.

# நாங்கள் பாதுகாப்பிற்கு முதலிடம் தருகிறோம், மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் உறுதியாக இருக்கிறோம்

நம்மையும், சுற்றுச்சூழலையும் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி நாங்கள் அறிவோம். ஒரு நிறுவனம் என்ற முறையிலும், தனிநபர்கள் என்ற முறையிலும், நாங்கள் செய்யும் எல்லாவற்றின் மையத்திலும் பாதுகாப்பையும், நல்வாழ்வையும் முன்னிறுத்துகிறோம், மற்றும் சுற்றுச்சூழலில் நமது தாக்கத்தைக் குறைப்பதில் நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

இந்தப் பகுதியில்:

-

-சுற்றுச்சூழல்

-

சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு

-

தயாரிப்பு வழிநடத்தல்

# சுற்றுச்சூழல்

**கிளாரியண்ட் -இல், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கான எங்கள் பொறுப்பை நாங்கள் அறிவோம், மேலும் நமது சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதில் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.**

**அனைத்துச் சுற்றுச்சூழல் சட்டங்கள், கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களுடன் முழுமையான இணக்கத்தை நாங்கள் உறுதிசெய்கிறோம், மேலும் உள்ளூர்ச் சமூகத்தின் மீதான விளைவு உட்பட சுற்றுச்சூழல் அபாயம் மற்றும் தாக்கத்தைக் குறைக்க நிலையான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.**

**பொருட்களின் செயல்திறனை உறுதிப்படுத்தவும், முடிந்தவரை கழிவு உற்பத்தியைக் குறைக்கவும் எங்கள் பொருட்களின் பயன்பாட்டைக் குறைக்கிறோம், அவற்றை மீண்டும் பயன்படுத்துகிறோம் மற்றும் மறுசுழற்சி செய்கிறோம்.**

**தேவையான மற்றும் பொருத்தமான இடர்த் தடுப்புகளை நாங்கள் அமல்செய்கிறோம். ஒரு விபத்து நடந்தால், விரைவாகவும், போதுமானதாகவும் பதில்வினை ஆற்றுவதை உறுதிசெய்வதற்காக, அவசரநிலை மேலாண்மை அமைப்பு செயல்பட்டு வருகிறது.**



## 1

**கற்றல் ஆதரவு**

**கேள்வி:**
உலகளாவிய அவசரநிலை நிர்வாகக் குழு நடத்திய ஓர் அவசரத் சோதனையைப் பற்றி எனக்குத் தெரிவித்து எனக்கு அழைப்பு ஒன்று வருகிறது. கூடிய விரைவில் அவசரநிலைக் குழுவைச் சந்திக்கும்படி நான் கேட்டுக் கொள்ளப்படுகிறேன். நான் செய்யவேண்டிய ஒரு பணிக்கு இன்று தான் கடைசி நாள், எனவே நான் கலந்து கொள்ளத் தேவையில்லை, இது சரிதானா?

**பதில்:**
அவசரநிலைச் சோதனைகள் தீவிரமாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. உண்மையான அவசரநிலை ஏற்பட்டால் நாம் அனைவரும் தயாராக இருக்கவேண்டும் என்பது மிகவும் முக்கியமானது. அவசரநிலைகள் என்பது பணியாளர்களுக்கும், கிளாரியண்ட் -க்கும் கடுமையான அச்சுறுத்தலாக இருக்கக்கூடும், மேலும் அவற்றுக்கு மிக அதிக முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் - அதனால் சில பணிகளைக் காலக்கெடுவுக்குள் முடிக்காமல் தவறவிட்டாலும் கூட.

## 2

**கற்றல் ஆதரவு**

**கேள்வி:**
நமது உற்பத்தித் தலத்திலிருந்து இரசாயனக் கழிவுகள் போலத் தோன்றுவதை என்னுடைய சக ஊழியர் அருகிலுள்ள ஆற்றில் அப்புறப்படுத்துவதை நான் காண்கிறேன். அவ்வாறு செய்ய அனுமதிக்கப்படுகிறதா என்று நான் அவரிடம் கேட்கிறேன், இந்த வகைத் தயாரிப்புக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று அவர் உறுதிப்படுத்துகிறார். இவ்வாறு அப்புறப்படுத்துவது அனுமதிக்கப்படுகிறதா என்பது எனக்கு இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. நிலைமையை மேலும் தெளிவுபடுத்திக்கொள்வது எனது பொறுப்பா?

**பதில்:**
தெளிவுபடுத்திக்கொள்ள முடியாத ஒரு கவலை உங்களுக்கு இருந்தால், நீங்கள் வெளிப்படையாகப் பேச வேண்டும். சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் கிளாரியண்ட் அர்ப்பணிப்புடன் உள்ளது, எனவே இவ்வாறு அப்புறப்படுத்துதல் உள்ளூர் விதிமுறைகளுக்கு உட்பட்டது என்பதை உறுதிப்படுத்த நீங்கள் கவனித்தவற்றை ESHA உடன் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

# சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு




ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான பணிச்சூழல் என்பது கிளாரியண்ட் -இன் முக்கிய முன்னுரிமைகளில் ஒன்றாகும், மேலும் இந்தப் பொறுப்பை நாங்கள் மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம். கிளாரியண்ட் எங்கள் தலங்களில் உள்ள - கிளாரியண்ட் ஊழியர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் பார்வையாளர்கள் - அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சுகாதார மற்றும் பாதுகாப்பு மேலாண்மை அமைப்பைக் கொண்டுள்ளது. அபாயங்களை முறையாகக் கண்டறிந்து சரியான நடவடிக்கைகளை நிறுவுவதன் மூலம் விபத்துகளைத் தடுக்கவும் இது உதவுகிறது.

நாம் ஒவ்வொருவரும் நமது பொறுப்பில் இருக்கும் பணிகளில் பொருந்தும் விதிகளைப் பற்றி அறிந்திருக்க வேண்டும் - இதில் பாதுகாப்பு மற்றும் அவசரகாலப் பயிற்சிகளில் கலந்துகொள்வதும் அடங்கும். பணியிடத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான அனைத்து ஒழுங்குமுறைத் தேவைகளையும் நாங்கள் மதிக்கிறோம், மேலும் தொடர்புடைய அபாயங்களை நாங்கள் குறைக்கிறோம் மற்றும் நிர்வகிக்கிறோம். மேலும், இளவயதுடைய அல்லது எளிதில் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர்கள் உள்ளிட்ட பணியாளர்களுக்குப் பொருந்தக்கூடிய சிறப்புத் தேவைகளை நாங்கள் கவனமாகப் பரிசீலிக்கிறோம்.

ஆரோக்கியம் மற்றும்/அல்லது பாதுகாப்புச் சம்பவம் ஏதாவது ஏற்பட்டால், மேற்கொண்டு விசாரணைக்கு உடனடியாக அதைப் பொறுப்பான ESHA மேலாளரிடம் தெரிவிக்கிறோம். கிளாரியண்ட் -இன் ESHA வழிகாட்டுதல்களின்படி தேவையான திருத்த நடவடிக்கைகள் முன்னுரிமையாகச் செயல்படுத்தப்படுகின்றன.

## இளம் தொழிலாளர்கள்

18 வயதிற்குட்பட்ட அனைத்து தொழிலாளர்களும் இளம் தொழிலாளர்களாக கருதப்படுகிறார்கள்.

## எளிதில் பாதிக்கப்படக்கூடிய நபர்கள்

இந்தக் குழுவில் கர்ப்பிணிப் பெண்கள், கிளாரியண்ட் -இன் மருத்துவக் கண்காணிப்பின் எல்லைக்கு வெளியே உள்ள தற்காலிகத் தொழிலாளர்கள், பயிற்சியாளர்கள், தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்கள் மற்றும் சில ஆரோக்கியப் பிரச்சனைகளைக் கொண்ட ஊழியர்கள் உள்ளடங்குவார்கள்.

→ **இதையும் பார்க்கவும்**
மனித உரிமைகளை மதித்தல்

**கிளாரியண்ட் -இன் உயிர் காக்கும் விதிகள் குறித்து நாம் அனைவரும் அறிந்திருக்க வேண்டும்:**

-

**1.80 மீட்டர் அல்லது 6 அடிக்கு மேல் உயரமான மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிக்கு வெளியே வேலை செய்யும் போது கீழே விழுவதிலிருந்து பாதுகாப்பைப் பயன்படுத்துங்கள்;**

-

**தேவைப்படும் இடங்களில், எப்போதும் சரியான பணி அனுமதி (வொர்க் பெர்மிட்) உடன் வேலை செய்யுங்கள்;**

-

**ஆபத்திலிருந்து உங்களைப் பாதுகாக்க 'லாக் -அவுட் / டேக் -அவுட்' நடைமுறைகளைப் பயன்படுத்துங்கள்;**

-

**- தேவைப்படும்போது தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (PPE) அணியுங்கள்;**

-

**தொங்கவிடப்பட்ட சுமைகளின் கீழ் நடக்காதீர்கள் அல்லது வேலை செய்யாதீர்கள்;**

-

**அங்கீகாரம் இல்லாமல் மற்றும் கூடுதல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இல்லாமல் பாதுகாப்புக்கு முக்கியமான உபகரணங்களை முடக்காதீர்கள்.**

**இந்த விதிகள் மீறப்படுவதை நீங்கள் கண்டால், உடனடியாக உங்கள் மேலாளர் அல்லது ESHA உடன் பேச வேண்டும்.**

# தயாரிப்புப் பொருள் மேற்பார்வை

புதுமையான, பாதுகாப்பான மற்றும் நிலையான தீர்வுகளை வழங்குவது எங்கள் மிக உயர்ந்த முன்னுரிமைகளில் ஒன்றாகும். முழு மதிப்புச் சங்கிலியிலும் இரசாயனங்களின் பாதுகாப்பான பயன்பாடு மற்றும் நிர்வாகத்தை ஊக்குவிக்க நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம். எனவே, வேதியியல் துறையின் நிலைத்தன்மைக்கான அர்ப்பணிப்பைக் குறிக்கும் **Responsible Care**® -இல் கிளாரியண்ட் கையொப்பமிட்டுள்ளது .

இரசாயனங்கள் தொடர்பான ஒழுங்குமுறைத் தேவைப்பாடுகளுக்கு நாங்கள் இணங்குகிறோம் மற்றும் சமரசம் செய்யாமல் தரநிலைகளையும், வழிகாட்டுதல்களையும் பின்பற்றுகிறோம். இவை எங்கள் தயாரிப்புகளின் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் உற்பத்தியில் மிக உயர்ந்த சுகாதாரத் தரநிலைகளையும் கடுமையான தரக் கட்டுப்பாட்டையும் உறுதி செய்கின்றன.

எங்கள் இரசாயனங்களை எவ்வாறு பாதுகாப்பாக நிர்வகிப்பது மற்றும் பயன்படுத்துவது என்பது பற்றிய விரிவான மதிப்பீடு மூலமாகவும், வாடிக்கையாளருக்குத் தகவல் தெரிவிப்பதன் மூலமாகவும், இரசாயனப் பாதுகாப்பிற்கான எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் உறுதிசெய்கிறோம். மேலும், சுற்றுச்சூழலுக்கும் பொதுச் சுகாதாரத்துக்கும் ஏற்படும் எந்த அபாயத்தையும் தொடர்ச்சியாகக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு, தெளிவான நிலைத்தன்மையின் முன்னோக்குகள் தயாரிப்பு வளர்ச்சியில் உட்பொதிந்துள்ளன என்பதை உறுதிசெய்கிறோம், இது நிலைத்தன்மையின் அடிப்படையிலான நிலையான வணிகத்துக்கும், தயாரிப்புத் துறைக்கும் வழிவகுக்கிறது.

→ **இதையும் பார்க்கவும்**
அறிவுசார் சொத்து

# ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு நாம் அர்ப்பணிப்பைக் கொண்டுள்ளோம்

சமூகம் மற்றும் பொருளாதாரங்களில் பேரழிவு தரக்கூடிய தாக்கத்தை ஊழல் ஏற்படுத்துகிறது, மற்றும் சமத்துவமின்மையை உருவாக்கி நிதி உறுதியற்ற தன்மையை ஏற்படுத்துகிறது, செல்வத்தைப் பாதிக்கிறது மற்றும் பொருளாதார வளர்ச்சியைக் குறைக்கிறது. கிளாரியண்ட் -இல், எந்தவொரு ஊழலையும் நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம், எங்கள் தொழில் நடவடிக்கைகளில் லஞ்சத்தைத் தடுக்க தேவையான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

இந்தப் பகுதியில்:

-
லஞ்சம் மற்றும் ஊழல்
-
பரிசுகள் மற்றும் அழைப்புகள்
-
அரசியல் செயல்பாடுகள்

# லஞ்சம் மற்றும் ஊழல்

கிளாரியண்ட் -இல் நாங்கள் எங்கள் தொழிலை நேர்மையுடனும், ஒருமைப்பாட்டுடனும் நடத்துகிறோம். முறையற்ற, நியாயமற்ற மற்றும் லஞ்சம் போன்ற சட்டவிரோத வழிமுறைகளின் மூலம் நாங்கள் சாதகங்களை நாடுவதில்லை.

லஞ்சம் மற்றும் ஊழலைக் கண்டறிவதும், அதைத் தவிர்ப்பதும் நமது நற்பெயரைப் பாதுகாப்பதற்கு முக்கியமாகும்.

நாங்கள் ஒருபோதும் லஞ்சம் கொடுப்பதில்லை, நாங்கள் ஒருபோதும் லஞ்சம் வாங்குவதில்லை அல்லது நாங்கள் அதிகார நிலையில் இருக்கும் சூழ்நிலைகளில் இருந்து முறையற்ற நன்மைகளைப் பெற முயற்சிசெய்ய மாட்டோம். ஒரு நிறுவனம் என்ற முறையில், கிளாரியண்ட் -ஐப் பிரதிநிதித்துவப்படுத்தும் எந்தவொரு மூன்றாம் தரப்பினரின் செயல்களுக்கும் கூட நாங்களே பொறுப்பாகலாம். எனவே, லஞ்சம் நேரடியாக எங்களால் கொடுக்கப்படுகிறதா அல்லது மூன்றாம் தரப்பினரால் மறைமுகமாகக் கொடுக்கப்படுகிறதா என்பது ஒரு பொருட்டல்ல, அதனால் எங்கள் சார்பாக மற்றவர்கள் லஞ்சம் கொடுக்கவும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

இந்த விஷயத்தில் கிளாரியண்ட் -க்கு இருக்கும் பொறுப்பை நாங்கள் புரிந்துகொள்கிறோம், மற்றும் அதை நாங்கள் மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம். எங்கள் சார்பாக வணிகத்தை நடத்தும் மூன்றாம் தரப்பினரால் லஞ்சம் கொடுக்கப்படுவதைத் தடுக்க அல்லது லஞ்ச-ஒழிப்புச் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறுவதைத் தடுக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்கிறோம். பொருத்தமான செயல்முறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தி, பொருத்தமான சரிபார்த்தல் செய்முறைகளை நடத்துவதன் மூலம் நமது தொழில் கூட்டாளர்களை கவனமாகவும், சரிபார்த்தலுக்குப் பிறகும் தேர்வு செய்வது இதில் அடங்கும்.

கிளாரியண்ட் -இல், அரசு அதிகாரிகளுக்கும், தனியார்களுக்கும் லஞ்சத்தை நாங்கள் வேறுபடுத்துவதில்லை - லஞ்சம் ரொக்க வடிவமாகவோ, வேறு ஏதாவது பரிசாகவோ, வேலைவாய்ப்புச் சலுகையாகவோ, வேறு ஏதேனும் பலனாகவோ கொடுக்கப்படுகிறதா என்பது ஒரு பொருட்டல்ல.

மதிப்புள்ள எதையும் வழங்குவதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு முன், அது எங்கள் கொள்கைகளுக்கு ஏற்ப இருப்பதையும், மேலும் அது எங்களுக்கு நலன் முரண்பாட்டை உருவாக்காமல் இருப்பதையும் நாங்கள் உறுதிசெய்கிறோம்.

லஞ்சம் மற்றும் ஊழலை முழுமையாகக் கண்டறிவது எப்போதும் எளிதல்ல என்பதால், சந்தேகம் ஏற்பட்டால் சட்டம் அல்லது இணக்கத்துறையிடமிருந்து மேலதிக வழிகாட்டுதல்களை நாங்கள் எப்போதும் நாடுகிறோம்.

லஞ்சம் ஒரு கிரிமினல் குற்றம் ஆகும், சில இடங்களில், நிறுவனங்களுக்கும், தனிநபர்களுக்கும் சமமாக அதிக அபராதம் விதிக்கப்படக்கூடும். தனிநபர்களுக்குக் கூடுதலாகச் சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்.

## ஊழல்

முறையற்ற நன்மையைப் பெற வேலைவாய்ப்பு, அதிகாரம் அல்லது நம்பிக்கையைத் துஷ்பிரயோகம் செய்தல்.

## லஞ்சம்

ஒரு வணிக, ஒப்பந்த, ஒழுங்குமுறை அல்லது தனிப்பட்ட அனுகூலத்தைப் பெறுவதற்காக வழங்கப்படும், வாக்குறுதியளிக்கப்படும், கொடுக்கப்படும், வெகுமதி அளிக்கப்படும் அல்லது வழங்கப்படும் மதிப்புள்ள எதுவும். பொது லஞ்சம் என்பது ஒரு பொதுத்துறை அதிகாரி, ஊழியர் அல்லது பொது அதிகார நிலையில் உள்ள நபரைக் குறி வைத்துச் செலுத்தப்படுகிறது, அதேசமயம் தனியார் லஞ்சம் என்பது அரசு அதிகாரிகள் அல்லது வசதிகளை உள்ளடக்கியிருக்காத ஊழலின் ஒரு வடிவமாகும்.

## பொதுத்துறை அதிகாரி

பொதுத்துறை அதிகாரி என்றால்:

- அரசாங்கத்தின் எந்தவொரு அதிகாரி அல்லது ஊழியர்; அல்லது
- ஏதேனும் துறை, நிறுவனம் அல்லது அதை சார்ந்த அமைப்பு; ஒரு பொது சர்வதேச அமைப்பு, அல்லது
- எந்தவொரு அரசு, துறை, நிறுவனம் அல்லது அமைப்பின் சார்பாக அல்லது
- அத்தகைய பொது சர்வதேச அமைப்புக்காக அல்லது அது சார்பாக அதிகாரப்பூர்வமாக செயல்படும் எந்தவொரு நபரும்.

குடும்ப உறுப்பினர்கள், வாழ்க்கைத் துணைவர்கள், நெருங்கிய நண்பர்கள் மற்றும் ஒரு பொது அதிகாரியுடன் வீட்டைப் பகிர்ந்து கொள்ளும் எந்தவொரு நபர் போன்ற தொடர்புடைய தரப்புகளும் இதில் அடங்குவார்கள்.

→ **இதையும் பார்க்கவும்**
துல்லியமான புத்தகங்கள் மற்றும் பதிவுகள்
தொண்டுநிறுவனத்திற்கு அன்பளிப்புகள், ஸ்பான்சர்ஷிப்கள் மற்றும் கார்ப்பரேட் குடியுரிமை நடவடிக்கைகள்
நலன் முரண்பாடுகள்
மோசடி
பண மோசடி (மணி லாண்டரிங்)

# 1

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
விமான நிலையத்தில் இம்மிக்ரேஷன் செயல்முறை வெளிப்படையாக விவரிக்கப்பட்டுள்ளது, மற்றும் விசா முத்திரை இலவசமாக அளிக்கப்படுகிறது. ஆயினும்கூட, விசா முத்திரைக்கு ஒரு சிறிய கட்டணம் செலுத்தும்படி என்னைக் கேட்கிறார்கள், மற்றும் எல்லோரும் அதைச் செலுத்துகிறார்கள். நானும் அதைச் செலுத்தவேண்டுமா?

**பதில்:**
ஒரு வசதிக் கட்டணம் (“மாமூல்” அல்லது “துரிதப்படுத்தல் கட்டணம்” என்றும் குறிப்பிடப்படுகிறது) என்பது உங்களுக்குச் சட்டப்பூர்வமாக உரிமை உள்ள ஒரு சேவையைப் பெறுவதற்காக ஒரு பொது அதிகாரிக்குச் செலுத்தப்படும் ஒரு சிறிய கட்டணம். வசதிக் கட்டணமாக இருக்கலாம் என்று நீங்கள் நினைக்கும் கூடுதல் கட்டணம் உங்களிடம் கேட்கப்படும் போதெல்லாம், அதைச் செலுத்துவதற்கு முன்பு நீங்கள் இணக்கம் அல்லது சட்டத்துறையைத் தொடர்பு கொள்ள வேண்டும். விசா தேவைப்படும் இடங்களுக்குச் செல்லும்போது நீங்கள் நன்கு தயாராக இருப்பதை உறுதிசெய்து அந்த ஊருக்கான தேவைகளை அறிந்து கொள்ளுங்கள்.

# 2

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
நான் சமீபத்தில் நிறுவனத்தில் பணியில் சேர்ந்தேன், உள்ளூர் நடைமுறைகளைப் பற்றி தெரிந்துகொண்டிருக்கும் போது, எனது மேற்பார்வையாளர் ஒரு பொது அதிகாரியின் மருமகனுக்கு ஒரு வேலையை வழங்கியதாக என்னிடம் கூறினார், இது நிலுவையில் உள்ள லோக்கல் பெர்மிட்டை பெறுவதில் இருந்த சிக்கலைத் தீர்க்க உதவியது என்று கூறினார். இது சரியானது என்று நான் நினைக்கவில்லை, ஆனால் நான் நிறுவனத்திற்கு இன்னும் புதியவனாக இருப்பதால் நான் தலையிட விரும்பவில்லை. நான் செய்யக் கூடியது எதுவும் உள்ளதா?

**பதில்:**
மேற்பார்வையாளரின் நடத்தை சட்டவிரோதமானது மற்றும் அது நம் நிறுவனத்தின் நற்பெயருக்கு அபாயத்தை விளைவிக்கக்கூடும். இணக்கத்துறை உறுப்பினரிடம் நீங்கள் கவனித்தவற்றைப் பற்றி உடனடியாகப் பேச வேண்டும்.

# 3

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
ஒரு தொழில் பயணத்தில், ஒரு உள்ளூர்ப் போலீஸ் அதிகாரி என்னை நிறுத்துகிறார். நான் வேகமாக வந்தேன் என்று அவர் கூறுகிறார் ஆனாலும் இல்லை என்று நான் உறுதியாக நம்புகிறேன். நான் அவரிடம் பணத்தைச் செலுத்தினால், என்னை விடுவிக்க முடியும் என்று அவர் கூறுகிறார் - அச்சுறுத்தும் சைகைகளுடன் - எனக்கு உண்மையில் வேறு வழி இல்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறார். அவருக்குப் பணம் கொடுக்காவிட்டால் அடிபடுவேன் என்று நான் பயப்படுகிறேன். நான் என்ன செய்ய வேண்டும்?

**பதில்:**
ஆரோக்கியம், பாதுகாப்பு அல்லது உடல் நலத்திற்கு உடனடி அச்சுறுத்தல் சம்பந்தப்பட்ட அவசரகாலச் சூழ்நிலைகளில், பணம் செலுத்த அனுமதிக்கப்படுகிறது. சம்பவத்தை உடனடியாக உங்கள் மேற்பார்வையாளருக்கும், இணக்கத்துறைக்கும் புகாரளிக்கவும்.

# பரிசுகள் மற்றும் பொழுதுபோக்கு

**பரிசுகள், பொழுதுபோக்கு மற்றும் பிற அன்பளிப்புகள் பல கலாச்சாரங்களின் ஒரு பகுதியாக உள்ளன மற்றும் - ஒரு குறிப்பிட்ட மதிப்பு வரை - பொதுவான வணிக நடைமுறைகள் மற்றும் பாராட்டுக்கான அடையாளங்களாக உள்ளன. ஆனால் வரம்புகள் உள்ளன. தொழில் நடத்தையில் நமது பாரபட்சமற்ற தன்மையை நாம் எப்போதும் பாதுகாக்கவேண்டும்.**

**பரிசுகள் மற்றும் அழைப்புகள் எப்போதும் நியாயமான மதிப்புடையவையாக இருக்கவேண்டும் மற்றும் அவை நடத்தும் தொழிலுக்குத் தொடர்புடையவையாக இருக்க வேண்டும். பரிசு மற்றும் பொழுதுபோக்கு கொடுப்பதும் கூட அடிக்கடி நடக்கக்கூடாது.**



**பரிசுகள் அல்லது அழைப்பிதழ்கள் ஒரு சுயாதீனமான முடிவெடுக்கும் செயல்முறையை தவறாகப் பாதிக்கும் நோக்கத்தை, கடமை உணர்வை உருவாக்கும் நோக்கத்தை அல்லது கிளாரியண்ட் -இன் நலன்களுக்குத் தீங்கு விளைவிக்கும் நோக்கத்தைக் கொண்டிருக்கக்கூடாது. இத்தகைய பரிசுகளும், அழைப்புகளும் தடைசெய்யப்பட்டுள்ளன.**

**கிளாரியண்ட் -இன் கொள்கைகள் ஒரு பரிசை ஏற்றுக்கொள்வதைத் தடைசெய்யும் சூழ்நிலைகள் இருந்து, ஆனால் உள்ளூர்க் கலாச்சாரப் பழக்கவழக்கங்களின்படி பரிசை மறுப்பதை அவமதிப்பாகக் கருதும் சூழ்நிலைகள் இருக்கலாம். சட்டப்பூர்வமானதாக இருந்தால், நாம் பரிசை ஏற்றுக் கொள்ளலாம், ஆனால் பரிசு கிளாரியண்ட் -க்காகப் பெறப்பட்டதாகவும், ஆனால் எங்கள் தனிப்பட்ட நலனுக்காக அல்ல என்றும் நன்கொடை அளிப்பவருக்குத் தெரிவிக்கவேண்டும். இந்தப் பரிசுப் பொருளை மேற்கொண்டு பயன்படுத்துவதைப் பற்றித் தீர்மானிக்க உடனடியாக இணக்கத்துறை உறுப்பினருடன் கலந்தாலோசிக்கவும்.**

## பரிசு

நட்பு அல்லது மரியாதையின் அடையாளமாக, வெளிப்படையான முறையில் வழங்கப்பட்ட பொருட்கள், சேவைகள் அல்லது பாராட்டுக்கான பிற டோக்கன்கள். அவை பதிலுக்கு மதிப்புள்ள எதையும் எதிர்பார்க்காமல் வெளிப்படையாக வழங்கப்படவேண்டும். ஒரு விளம்பரப் பொருளில் லோகோ அல்லது செய்தியை இணைப்பதன் மூலம் உறவுகளை மேம்படுத்த அல்லது கொடுக்கும் நிறுவனத்தின் பிராண்டை விளம்பரப்படுத்தப் பரிசுகள் பயன்படுத்தப்படுகின்றன.

## பொழுதுபோக்கு

பொழுதுபோக்கு, உணவு, வரவேற்புகள், பொழுதுபோக்குக்கான டிக்கெட்டுகள், சமூக அல்லது விளையாட்டு நிகழ்வுகள், விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்பது, தொழிலில் உள்ள நபர்களிடையே உறவுகளைத் தொடங்க அல்லது வளர்க்க இத்தகைய நடவடிக்கைகள் வழங்கப்படுகின்றன அல்லது பெறப்படுகின்றன. விருந்தோம்பல் கொடுப்பவர் அல்லது அதன் பிரதிநிதி அந்த நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை மற்றும் விருந்தினராகச் செயல்படவில்லை என்றால், அத்தகைய பொழுதுபோக்கு ஒரு பரிசாக கருதப்படும். கிளாரியண்ட் தொடர்பான எந்தவொரு வணிகச் சூழலிலும் வாழ்க்கைத் துணைவர்கள் அல்லது பிற குடும்ப உறுப்பினர்கள் பொழுதுபோக்கிலிருந்து விலக்கப்படவேண்டும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அழைப்புகள் நிராகரிக்கப்பட வேண்டும்.

→ **கொள்கைகள்**
பரிசுகள் மற்றும் அழைப்புகளை ஏற்றுக்கொள்வதற்கான கொள்கை

→ **நலன் முரண்பாடுகள்**
என்பதையும் காண்க

வழங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட பரிசுகளும்,
பொழுதுபோக்குகளும் எப்போதும்

-

நியாயமான மதிப்புடையவையாக
இருக்கவேண்டும்;

-

அரிதாக இருக்கவேண்டும்;

-

ஒரு நியாயமான
வியாபார நோக்கத்தைப்
பூர்த்திசெய்யவேண்டும்;

-

ஏற்றுக்கொள்ளக்கூடிய
வணிக நடைமுறைகளுடன்
ஒத்துப்போகவேண்டும்,
பெறுநரின் நடத்தை விதிமுறை
அதை அனுமதித்தால் மட்டுமே
வழங்கப்படவேண்டும்;

-

நல்ல ரசனையுடனும்,
கலாச்சாரம் சார்ந்து
ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும்
இருக்கவேண்டும்.

பரிசுகளும், பொழுதுபோக்குகளும் இவ்வாறாக இருந்தால்
தவிர்க்கப்பட வேண்டும் அல்லது நிராகரிக்கப்பட வேண்டும்

-

அவை கிளாரியண்ட் -க்கு
அவமதிப்பு ஏற்படுத்துபவையாக
அல்லது சங்கடப்படுத்துபவையாக
இருந்தால்;

-

வயது வந்தோருக்கான
ஆபாசப் பொழுதுபோக்கு என
வகைப்படுத்தக்கூடியவை;

-

ஆடம்பரமானவை அல்லது
மற்றவர்களால் ஆடம்பரமாக
உணரப்படக்கூடியவை;

-

பணம் அல்லது பரிசு அட்டை,
காசோலைக் கடன், பங்கு
அல்லது அதிக நிதி அல்லது அந்த
வகையான நன்மைகள் கொண்ட
பணத்திற்குச் சமமானவை;

—

கோரிக்கையின் பேரில்
வழங்கப்படுபவை;

—

ரகசியமாகக் கொடுக்கப்படுபவை;

—

வேலை அல்லது
பொதுக் கடமைகளின்
செயல்திறனைப் பாதிக்க
வடிவமைக்கப்பட்டுள்ளவை
அல்லது அவ்வாறு உணரப்படுபவை;

—

வணிக முடிவுகளுடன்
ஒத்துப்போகும் அதே நேரத்தில்
கொடுக்கப்படுபவை, இதன்
மூலம் நேரம் என்பது வணிகத்
தீர்ப்பைத் தவறாகப் பாதிக்கும்
முயற்சியாகத் தோன்றலாம்;

# அரசியல் செயல்பாடுகள்

**ஒரு பொறுப்பான கார்ப்பரேட் நிறுவனமாக, அரசியல்வாதிகள், அதிகாரிகள், வணிகச் சங்கங்கள், மற்றும் தொடர்புடைய கொள்கைப் பகுதிகளில் உள்ள அரசு சாரா நிறுவனங்களுடன் திறந்த, வெளிப்படையான உரையாடலை உறுதி செய்வதை கிளாரியண்ட் நோக்கமாகக் கொண்டுள்ளது.**

**கிளாரியண்ட் சார்பாக அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள் அல்லது தொடர்புடைய அமைப்புகளுக்கு பண அன்பளிப்பு உட்பட எந்த அரசியல் பங்களிப்புகளும், அத்துடன் தனிப்பட்ட அரசியல் நடவடிக்கைகளுக்கு வேலை நேரத்தை அல்லது பிற நிறுவன சொத்துக்களைப் பயன்படுத்துவதும் தடைசெய்யப்பட்டுள்ளன. எங்கள் கொள்கைகளுடன், அதாவது எங்கள் லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல்-எதிர்ப்புக் கொள்கையுடன் முழுமையாக இணங்க, கொள்கை உருவாக்குபவர்கள் மற்றும் அதிகாரிகளுடன் கிளாரியண்ட்- க்கான உறவை வளர்ப்பதில் அல்லது ஆதரவை நாடுவதில் ஈடுபட ஊழியர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.**

**அரசியல் செயல்பாடு**

அரசியல் செயல்பாடு என்பது கொள்கை உருவாக்குபவர்களுடனான எந்தவொரு தொடர்பும் அல்லது கொள்கைஉருவாக்குவதோடு தொடர்புடைய ஒரு பங்குதாரரும், கொள்கைகளின் உருவாக்கத்திற்கு பங்களிப்பு அல்லது பொதுக் கொள்கை உரையாடலில் பிற ஈடுபாடும் ஆகும்.

→ **இதையும் பார்க்கவும்**
தொண்டுநிறுவனத்திற்கு அன்பளிப்புகள், ஸ்பான்சர்ஷிப்கள் மற்றும் கார்ப்பரேட் குடியுரிமை
நடவடிக்கைகள்
நலன் முரண்பாடுகள்

# 1

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
நான் பல ஆண்டுகளாக உள்ளூர் லிபரல் கட்சியில் உறுப்பினராக உள்ளேன். இப்போது நான் கிளாரியண்ட் -இல் சேர்ந்துள்ளேன், எனது கட்சிப் பணியைத் தொடர எனக்கு நிறுவனத்தின் அனுமதி தேவையா?

**பதில்:**
இல்லை, நீங்கள் அனுமதி பெறத் தேவையில்லை. பணி நேரத்திற்கு வெளியே நடைபெறும் வரை, அரசியல் நடவடிக்கைகளில் தனிப்பட்ட முறையில் பணியாளர்கள் பங்கேற்பதை கிளாரியண்ட் தடைசெய்யவில்லை, அது ஒரு தனிப்பட்ட ஈடுபாடாக இருக்க வேண்டும், மேலும் அது உங்கள் வேலையைச் செய்வதற்கான உங்கள் திறனுடன் முரண்படவோ, எதிர்மறையாகப் பாதிக்கவோ கூடாது. சந்தேகம் இருந்தால், எப்போதும் வெளிப்படையாக இருப்பது நல்லது, மேலும் இதுபோன்ற செயல்களைப் பற்றி உங்கள் மேலாளர் மற்றும் / அல்லது மனிதவளத்துறைக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிப்பது நல்லது.

# 2

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
நான் ஒரு தல மேலாளர் மற்றும் ஒரு தொழிற்சாலைக் கட்டுமானத் திட்டத்திற்காக உள்ளூர்ச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிறுவனத்துடன் வழக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கிறேன். அது ஒரு அரசியல் நடவடிக்கையா?

**பதில்:**
ஒரு தல மேலாளராக, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளூர் அதிகாரிகளுடன் தேவைக்கேற்ப ஈடுபடுவது உங்கள் பணியின் ஒரு பகுதியாகும். இந்தச் சூழ்நிலையில், எந்த ஈடுபாடும் தொடர்புடைய பிராந்தியத் தலைவர் மற்றும் பிராந்திய/ கார்ப்பரேட் சஸ்டெய்னபிலிடி மற்றும் ஒழுங்குமுறை விவகாரங்களுடன் ஒத்துப்போகவேண்டும்.

# 3

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
புதிதாகக் கட்டப்படவிருக்கும் ஒரு தலத்தில் ஒரு புதிய தொழில்நுட்பத் திட்டத்தைப் பயிற்றுவிப்பதற்கும், அதை ஊக்குவிப்பதற்கும் பரந்த அளவிலான அரசியல்வாதிகளுடன் நான் ஈடுபட வேண்டிய அவசியம் உள்ளது. ஒரு லாபியிஸ்ட் -ஐ அமர்த்திக்கொள்ள எனக்கு அனுமதி உள்ளதா?

**பதில்:**
மூன்றாம் தரப்பினரை (ஓர் ஆலோசனை அல்லது லாபியிங் நிறுவனம் போன்றவை) அமர்த்திக்கொள்ள முடிவுசெய்தால் - கிளாரியண்ட் சார்பாக - லாபியிங் நடவடிக்கைகள் அல்லது கொள்கை உருவாக்குபவர்களுடனான தொடர்புகள் சம்பந்தப்பட்ட ஒரு பணிக்கு எந்தவொரு உறவிலும் நுழைவதற்கு முன்பு நீங்கள் நெறிமுறைகள் மற்றும் இடர் மேலாண்மைக் குழு (ERMC) -வின் முன் ஒப்புதல் பெற வேண்டும். இது குழு கண்டுபிடிப்பு மற்றும் நிலைத்தன்மை (GIS) மற்றும் இணக்கத்துறையால் மீளாய்வு செய்யப்படும்.

# நாம் நமது சமூகத்தைப் பற்றி அக்கறை கொண்டுள்ளோம், மற்றும் ஒரு நல்ல கார்ப்பரேட் குடிமகனாக நடந்து கொள்கிறோம்

கிளாரியண்ட் -இல் எங்கள் சொந்தச் செயல்பாடுகளுக்கு அப்பாலும் எங்கள் தாக்கம் உள்ளது என்பதை நாங்கள் அங்கீகரிக்கிறோம் மற்றும் முடிவுகளை எடுக்கும்போது இதைக் கவனத்தில் கொள்கிறோம். நாங்கள் இயங்கும் சமூகங்களில் நாங்கள் மரியாதைக்குரிய உறவைப் பேணுகிறோம். முழு மதிப்புச் சங்கிலி முழுவதும் மக்கள், பூமி மற்றும் செயல்திறன் ஆகியவற்றில் எங்கள் தாக்கத்தை மேம்படுத்துவதற்கு நாங்கள் அர்ப்பணிப்புடன் உள்ளோம்.

இந்தப் பகுதியில்:

–

மனித உரிமைகளை மதித்தல்

–

தொண்டு நிறுவனத்திற்கு அன்பளிப்புகள், ஸ்பான்சர்ஷிப்கள் மற்றும் கார்ப்பரேட் குடியுரிமை நடவடிக்கைகள்

–

நலன் முரண்பாடுகள்

# மனித உரிமைகளை மதித்தல்

கிளாரியண்ட் -இல், கிளாரியண்ட் -இன் முழுச் செயல்பாட்டு செயல்முறைகள், விநியோகச் சங்கிலிகள் மற்றும் எங்கள் சமூகங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களில் நாங்கள் மனித உரிமைகளைப் பாதுகாக்கிறோம், மதிக்கிறோம், ஊக்குவிக்கிறோம்.

மேலும், சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமைத் தரங்களான வணிக மற்றும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா வழிகாட்டுதல் கோட்பாடுகள், சர்வதேச உரிமைகள் மசோதா, மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம், ஐ.நா. உலகளாவிய உடன்படிக்கை மற்றும் சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் நான்கு அடிப்படைக் கொள்கைகள் (cf. தொழிலாளர் உரிமைகள்) ஆகியவற்றை நாங்கள் அங்கீகரிக்கிறோம் மற்றும் பின்பற்றுகிறோம்.

→ **இதையும் பார்க்கவும்**
மக்களை நடத்துவது
தொழிலாளர் உரிமைகளை மதித்தல்

# தொண்டுநிறுவனத்திற்கு அன்பளிப்புகள், ஸ்பான்சர்ஷிப்கள் மற்றும் கார்ப்பரேட் குடியுரிமை நடவடிக்கைகள்

கிளாரியண்ட் ஒரு கௌரவமான கார்ப்பரேட் குடிமகனாக இருக்க விரும்புகிறது, மேலும் நிறுவனம் செயல்படும் சமூகங்களுக்குச் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்புகிறது.

பணியாளர்கள் தங்கள் உள்ளூர்ச் சமூகங்களுடன் தன்னார்வ அடிப்படையில் ஈடுபட ஊக்குவிக்கப்படுகிறார்கள். தன்னார்வ மற்றும் பிற தொடர்புடைய நடவடிக்கைகள் மூலம் உள்நாட்டில் பங்களிக்க நிறுவனத்தின் வளங்களைப் பயன்படுத்துவதை கிளாரியண்ட் ஆதரிக்கிறது.



**கிளாரியண்ட் சார்பாக அல்லது கிளாரியண்ட் வளங்களுடன் நடத்தப்படும் அனைத்துச் சமூக நடவடிக்கைகளும் எங்கள் உத்தியின் படி சரியான முறையில் நடத்தப்படுவதையும், கிளாரியண்ட் - க்குள் சரியான அளவிலான அதிகாரத்தால் அங்கீகரிக்கப்படுவதையும் நாங்கள் உறுதிசெய்கிறோம். தேவையான இடங்களில், இணக்கத்துறையின் மீளாய்வும் இதில் அடங்கும்.**

## தொண்டுநிறுவனத்திற்கு நன்கொடைகள்

தொண்டுநிறுவனத்திற்கு நன்கொடைகள் தன்னார்வ அடிப்படையில் நல்ல நம்பிக்கையுடன் செய்யப்படும் மூன்றாம் தரப்புப் பங்களிப்புகள் ஆகும், எ.கா. கிளாரியன்ட் -க்கு பணம் எதுவும் கொடுக்கப்படுவதில்லை அல்லது பதிலுக்கு எந்தப் பொருளும் பெறப்படுவதில்லை. தொண்டுநிறுவனத்திற்கு நன்கொடைகள் பணமாகவோ, பொருளாகவோ (எ.கா. கிளாரியண்ட் தயாரிப்புகளின் இலவச மாதிரிகள்) அல்லது தன்னார்வ ஊழியர் பணி நேரத்தின் பங்களிப்பு வடிவத்திலோ செய்யப்படலாம். அதற்கு ஈடாக, கிளாரியன்ட் கோராத அல்லது நிறுவனத்திற்கு எந்த மதிப்பும் இல்லாத ஏதாவது வழங்கப்பட்டால் கூட, அந்த அன்பளிப்பு ஒரு தொண்டுநிறுவனத்திற்கு நன்கொடையாகவே கருதப்படுகிறது.

## ஸ்பான்ஸார்ஷிப்கள்

கிளாரியண்ட் அல்லது அதன் பிராண்டுகளை விளம்பரப்படுத்தும் வாய்ப்பிற்கு ஈடாக மூன்றாம் தரப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்வுக்கு கிளாரியண்ட் செய்யும் நிதியுதவி அல்லது பொருளுதவி ஸ்பான்ஸார்ஷிப்கள் ஆகும். இதுபோன்ற செயல்பாடுகளில் கிளாரியண்ட் லோகோவை காட்சிப்படுத்தல், ஒரு நிகழ்வின் தொடக்க அல்லது நிறைவுப் பேச்சில் கிளாரியண்ட்டைக் குறிப்பிடுவது அல்லது ஒரு விவாதக் குழுவில் ஒரு பேச்சாளர் பங்கேற்பது மற்றும் சம்பந்தப்பட்ட நிகழ்விற்கான டிக்கெட்டுகள் ஆகியவை உள்ளடங்கலாம்.

→ **இதையும் பார்க்கவும்**
லஞ்சம் மற்றும் ஊழல்



# 1

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
நான் ஒரு உள்ளூர்த் தொண்டு நிறுவனத்தில் உறுப்பினராக உள்ளேன். நிதி சேகரிக்க ஒரு நிகழ்வை நாங்கள் திட்டமிடுகிறோம். ஒரு தொண்டு நன்கொடை கோரும் பொருட்டு, அவர்களை அழைக்க எனது கிளாரியண்ட் லெட்டர்ஹெட்டைப் பயன்படுத்தி கிளாரியன்ட் சப்ளையர்களைத் தொடர்பு கொள்ள வேண்டுமா என்று நான் யோசித்துக்கொண்டிருந்தேன். நான் அவ்வாறு செய்யலாமா?

**பதில்:**
இல்லை. நீங்கள் ஒரு தனியார் நிகழ்ச்சிக்கு கிளாரியண்ட் -இன் பெயரைப் பயன்படுத்த முடியாது, ஏனெனில் இது நலன் முரண்பாடு உள்ளதாக ஒரு தோற்றத்தை ஏற்படுத்தக்கூடும் - இது ஒரு தொண்டு நோக்கத்திற்காக இருந்தாலும் கூட. கிளாரியண்ட் -இன் பங்களிப்பு, நிறுவனத்திற்கு மதிப்பு சேர்க்கக்கூடிய ஒரு தொண்டு நிறுவனத்தைப் பற்றி உங்களுக்குத் தெரிந்தால், கார்ப்பரேட் குடியுரிமை மேலாண்மைக் கொள்கையில் விவரிக்கப்பட்டுள்ள செயல்முறையைப் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் மற்றும் எவையேனும் கேள்விகள் இருந்தால் உங்கள் குழு கண்டுபிடிப்புகள் மற்றும் நிலைத்தன்மை (GIS) மற்றும் ஒழுங்குமுறை விவகார மேலாளரை அணுக வேண்டும்.

# நலன் முரண்பாடுகள்

**கிளாரியண்ட் -இல், நாங்கள் தொழில் முனைவோர் சிந்தனையை ஊக்குவிக்கிறோம். நாங்கள் ஒவ்வொருவரும் எப்போதும் நிறுவனத்தின் சிறந்த நலனுக்காகச் செயல்படுகிறோம். இது நாங்கள் சிறந்த முடிவுகளை அடையவும், எங்கள் பங்குதாரர்களிடையே மரியாதையை வளர்க்கவும் உதவும்.**

**எனவே, கிளாரியன்ட் மற்றும் அதன் தொழிலின் சிறந்த நலனுக்காகச் செயல்படுவதற்கான நமது திறனை, நமது தனிப்பட்ட நலன்கள் பாதிக்கக்கூடிய அல்லது செல்வாக்கு செலுத்தக்கூடிய அல்லாது அவ்வறு தோற்றமளிக்கக்கூடிய எந்தச் சூழ்நிலையையும் தவிர்ப்பதை உறுதி செய்வோம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும், நலன் முரண்பாடுகள் அல்லது சாத்தியமுள்ள நலன் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக, நாங்கள் வெளிப்படையாகத் தெரிவிக்கிறோம்.**



## நலன் முரண்பாடுகள்

நலன் முரண்பாடு என்பது ஒரு ஊழியரின் தனிப்பட்ட நலன் கிளாரியண்ட் -இன் நலன் உடன் முரண்படும் ஒரு சூழ்நிலை ஆகும். இது பின்வரும் சூழ்நிலைகளை உள்ளடக்கியிருக்கலாம், ஆனால் இவை மட்டுமே அல்ல.

- வாடிக்கையாளர்களுடனோ அல்லது பிற வணிகக் கூட்டாளர்களுடனோ கிளாரியண்ட் -இன் வணிகத் தொடர்புகளிலிருந்து பணியாளர் அல்லது பணியாளரின் குடும்பம் நன்மைகளைப் பெறுகிற அல்லது நாடுகிற, வணிகக் கூட்டாளர்களுடனான குடும்ப அல்லது தனிப்பட்ட நலன்கள்.
- பிற நிறுவனங்களில் நிதிசார்ந்த நன்மைகள், இதில் ஊழியரின் தனிப்பட்ட முதலீடுகள் ஊழியரை கிளாரியண்ட் -உடன் போட்டியிட வைக்கும் அல்லது வைக்கலாம்.
- பணியிடத்திற்கு இடையூறாக மாறும் நிறுவனத்திற்குள்ளான அந்தரங்கமான தனிப்பட்ட உறவுகள் அல்லது சம்பந்தப்பட்ட நபர்கள் ஒரே அதிகார வரிசையில் பணிபுரிதல் அல்லது ஒருவருக்கு மற்றவரின் மீது முடிவெடுக்கும் அதிகாரம் அல்லது செல்வாக்கு இருத்தல்.
- வாடிக்கையாளர்களுடனோ அல்லது பிற வணிக கூட்டாளர்களுடனோ கிளாரியண்ட் -இன் வணிக உறவுகளை எதிர்மறையாக பாதிக்கும்படியான கிளாரியண்ட் -க்கு வெளியே வேலைவாய்ப்புகள் அல்லது வேலை நேரம் மற்றும் வேறு ஏதேனும் கிளாரியண்ட் சொத்து ஆகியவை வணிக நடவடிக்கைகளுக்கு வெளியே நடத்தப் பயன்படுபவை.
- பிற நிறுவனங்களில் வாரிய வேலைவாய்ப்புகள்
- கிளாரியண்ட் வேலைவாய்ப்பிலிருந்து பெறப்பட்ட அறிவு மற்றும் தகவல்களுடன் தனிப்பட்ட லாபம் அல்லது நன்மைக்கான வணிக வாய்ப்புகளைப் பெறுதல்.

→ **இதையும் பார்க்கவும்**
லஞ்சம் மற்றும் ஊழல்
மோசடி

# 1

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
நாங்கள் ஒரு புதிய சப்ளையரைத் தேடிக்கொண்டிருக்கிறோம், என்னுடைய நல்ல நண்பர் ஒருவர் ஒரு தொழிலை வைத்திருக்கிறார், அது நமக்குத் தேவையானதற்குப் மிகப் பொருத்தமாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். எனது நட்பின் காரணமாக சாத்தியமுள்ள நலன் முரண்பாடு ஏற்படக்கூடும் என்பதை நான் அறிவேன், ஆனால் ஒப்பந்தத்தை ஏலமிடும் செயல்பாட்டின் போது அவருடைய நிறுவனத்தை நாம் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்று அர்த்தமா?

**பதில்:**
இல்லை, இதற்கு உங்கள் நண்பரின் நிறுவனம் ஏலமிடும் செயல்முறையிலிருந்து விலக்கப்படவேண்டும் என்று அர்த்தமில்லை. நலன் முரண்பாடு ஏற்பட்டால், உங்கள் மேற்பார்வையாளருக்கும், இணக்கத்துறையிலிருந்து ஒருவருக்கும் நீங்கள் தெரிவிக்க வேண்டும், இதனால் நிலைமையை மதிப்பிட முடியும் மற்றும் அதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கமுடியும். உங்கள் நண்பரின் நிறுவனத்தை ஏலதாரராக நீங்கள் முன்மொழியலாம், ஆனால் நலன் முரண்பாட்டின் எந்தவொரு சாத்தியத்தையும் அல்லது நலன் முரண்பாடு போன்று எடுத்துக்கொள்ளப்படக்கூடியதையும் அகற்றுவதற்காக முடிவெடுக்கும் செயல்முறையிலிருந்து நீங்கள் விலக வேண்டும்.



# 2

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**
நாங்கள் ஒரு புதிய பயண நிறுவனத்திற்காக ஒப்பந்தம் செய்யும் செய்முறையை நடத்திக்கொண்டிருக்கிறோம், விண்ணப்பத்தவர்களில் ஒரு நிறுவனம் உள்ளது, அந்த நிறுவனம் மிகக் குறைந்த விலையைப் போட்டிருக்கிறது. அவர்களைச் சந்திக்கும் போது, அவர்கள் கிளாரியண்ட் -இடமிருந்து ஆர்டர் கிடைத்தால், அதற்குப் பதிலாக அவர்கள் எனக்கும், எனது குடும்பத்தினருக்கும் எங்கள் அடுத்த சுற்றுலாவுக்கு 50% தள்ளுபடியை வழங்குவதாகக் கூறுகிறார்கள். நாங்கள் எப்படியும் இந்த நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்போம், எனவே நான் இந்த சலுகையை ஏற்றுக்கொண்டால் பரவாயில்லை - இது சரியா?

**பதில்:**
இல்லை, இது சரியல்ல. ஏஜென்சி கிளாரியண்டிற்கு மிகச் சிறந்த பொருத்தமாக இருந்தாலும் கூட, நிறுவனத்திற்கு வெளியே உள்ள ஒருவருக்கு, இது தனிப்பட்ட சலுகையைப் பெறுவதற்காக நீங்கள் இந்த முடிவு எடுத்தீர்கள் என்ற எண்ணத்தை விளைவிக்கிறது. இது உங்களையும், கிளாரியண்ட் -ஐயும் ஊழல்வாதியாகக் காண்பிக்கும், இது நமது நற்பெயருக்குக் கடுமையாகத் தீங்கு விளைவிக்கும். உங்களுக்கு வேறு மாற்றுப் பயண ஏஜென்சிகள் இருந்தால், நீங்கள் இந்தச் சலுகையை மறுத்துவிடவேண்டும், மற்றும் உடனடியாக உங்கள் மேற்பார்வையாளருக்கும், இணக்கத்துறைக்கும் புகாரளிக்க வேண்டும்.

# நாங்கள் தகவல்களைக் கவனமாகக் கையாளுகிறோம்

கிளாரியண்ட் -இல், தகவல்களைச் சரியான முறையில் பாதுகாத்துக் கையாள்வதன் முக்கியத்துவத்தை நாங்கள் அறிவோம். நமது நிதி அறிக்கைகள் தகவல்களைத் துல்லியமாகவும், உண்மையாகவும் பிரதிபலிக்கின்றன. தகவல்களைத் துல்லியமாகவும், உண்மையாகவும் மற்றும் பொருந்தக்கூடிய அனைத்துச் சட்டங்கள் மற்றும் தரநிலைகளுக்கும், உள் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளுக்கும் ஏற்பவும் பராமரிப்பதை உறுதி செய்வதற்கு நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாகப் பொறுப்பேற்கிறோம்.

இந்தப் பகுதியில்:

—

தகவல் பாதுகாப்பு

—

தரவு தனியுரிமை

—

துல்லியமான கணக்குப் பதிவேடுகள் மற்றும் பதிவுகள்

# தகவல் பாதுகாப்பு

கிளாரியண்ட்ட் -ஐப் பொறுத்தவரை, தகவல் மிகவும் மதிப்புமிக்கது ஆகும். அதனால்தான் ஒருமைப்பாடு, இரகசியத்தன்மை மற்றும் கிடைக்கும் தன்மை குறித்துப் பாதுகாக்க வேண்டிய ஒரு சொத்தாக தகவலை நாங்கள் பார்க்கிறோம். கூடுதலாக, எங்கள் பங்குதாரர்கள், ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களைப் பற்றி நாங்கள் சேமித்து வைக்கும் எந்தவொரு தகவலையும் பாதுகாக்க எங்களுக்குக் கடமைப்பாடுகள் உள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் நோக்கங்களுக்காக மட்டுமே நிறுவனத்தின் தகவல்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது ஒரு விதி ஆகும். எங்கள் உள்-கொள்கைகளின்படி தகவல்களை நாங்கள் வகைப்படுத்துகிறோம், மேலும் நிறுவனத்திற்கு வெளியே எந்தவொரு தகவலையும் ‘பொது’ என வகைப்படுத்தாவிட்டால் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நபரால் ஒப்புதலளிக்கப்படாவிட்டால் நாங்கள் அதை வெளியிடமாட்டோம்.

இரகசியத்தன்மை காரணமாக, இரகசியத் தகவல்களுக்குக் கூடுதல் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பைப் பயன்படுத்துவோம். வைத்திருப்பதற்கு வெளிப்படையாக அனுமதி வழங்கப்பட்டவர்களால் மற்றும் தங்கள் வேலையைச் செய்வதற்கான தேவையைக் கொண்டிருப்பவர்களால் மட்டுமே இத்தகைய தகவல்களை அணுகமுடியும் என்பதை நாம் உறுதிசெய்யவேண்டும். எங்கள் குடும்ப , ஒரே வீட்டில் வசிக்கும் பிற நபர்களிடமோ, எங்கள் நண்பர்களிடமோ அல்லது தொடர்பில்லாத சக ஊழியர்களிடமோ எந்தவொரு இரகசியத் தகவலையும் நாங்கள் வெளியிடமாட்டோம் என்பதும் கூட இதன் பொருள் ஆகும்.

## இரகசியத் தகவல்கள்

இரகசியத் தகவல்களில் கிளாரியண்ட் -இன் வணிக நடவடிக்கைகள், தொழில்நுட்பம், அறிவுசார் சொத்து, நிதி நிலை மற்றும் பணியாளர்கள் பற்றிய தகவல்கள், அத்துடன் கிளாரியண்ட் -இன் வாடிக்கையாளர்கள், சப்ளையர்கள் மற்றும் வணிகக் கூட்டாளர்கள் பற்றிய அனைத்துத் தகவல்களும் அடங்கும், ஆனால் இவை மட்டுமே அல்ல. கிளாரியண்ட் -இன் அறிவுசார் சொத்தில் வர்த்தக இரகசியங்கள், காப்புரிமைகள், வர்த்தக முத்திரைகள் மற்றும் பதிப்புரிமை மட்டுமல்லாமல், வணிக, சந்தைப்படுத்தல் மற்றும் சேவைத் திட்டங்களும் தொழில்நுட்ப அறிவும் அடங்கும்.

→ **இதையும் பார்க்கவும்**
உள் வர்த்தகம்
அறிவுசார் சொத்து
நியாயமான போட்டி
ஊடக உறவுகள் மற்றும் முதலீட்டாளர் உறவுகள்

# 1

### கற்றல் ஆதரவு

**கேள்வி:**
வேலைக்குச் செல்லும்போது, ரயிலில் எனக்கு இரண்டு இருக்கைகளுக்குப் பின்னால் ஒரு தொலைபேசி உரையாடலைக் கேட்டேன். அந்தப் பெண் கிளாரியண்ட் -ஐப் பற்றிப் பேசுவது போலத் தோன்றியது, அப்போது கிளாரியண்டின் எதிர்காலத் திட்டம் குறித்த இரகசியத் தகவல்களை அவர் வெளிப்படுத்துகிறார் என்று நான் கேள்விப்படுகிறேன். அது எனக்கு அசௌகரியமாக இருந்தது. நான் தலையிட வேண்டுமா?

**பதில்:**
ஆம், நிலைமை அனுமதித்தால், நீங்கள் அவரிடம் குறுக்கிட்டுப் பணிவுடன் அவர் சொல்வது மற்றவர்களுக்குக் கேட்கலாம் என்று அவரிடம் சொல்ல வேண்டும், வணிகத் தகவல்களைப் பொதுவில் பகிர்வதைத் தவிர்க்கும்படி அவரிடம் கேட்க வேண்டும். எது எப்படியிருந்தாலும், இந்தச் சம்பவம் குறித்து இணக்கத்துறையில் ஒருவருக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும். கிளாரியண்ட் -இன் வணிகத் திட்டம் பற்றிய தகவல்கள் தொழில் இரகசியமாகக் கருதப்படுகின்றன, எனவே அவை கண்டிப்பாக இரகசியமாக வைக்கப்பட வேண்டும்.

# தரவுத் தனியுரிமை




தனியுரிமை மற்றும் தனிப்பட்ட தரவின் பாதுகாப்பு ஓர் அடிப்படை உரிமை ஆகும். கிளாரியண்ட் -இல், எங்கள் ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் தனிப்பட்ட தரவைப் பாதுகாப்பது ஒரு முக்கியமான முன்னுரிமையாகும், குறிப்பாக வேகமாக வளர்ந்து வரும் தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பங்களின் சூழலில் இது முக்கியமாகும்.

நாங்கள் தனிப்பட்ட விஷயங்களைத் தனிப்பட்டதாக வைத்திருக்கிறோம். தரவுகள், ஆரம்பத்தில் எந்த நோக்கத்திற்காகப் பெறப்பட்டனவோ அந்த நியாயமான நோக்கத்தை அடைவதற்கு எங்களுக்குத் தேவையான குறைந்தபட்ச தனிப்பட்ட தரவை மட்டுமே நாங்கள் சேகரிக்கிறோம், பயன்படுத்துகிறோம், வெளிப்படுத்துகிறோம் மற்றும் சேமிக்கிறோம்.

தனிப்பட்ட தரவை அவசியமான வரை அதன் செயலாக்க நோக்கத்திற்கு மட்டுமே நாங்கள் வைத்திருக்கிறோம், மேலும் நாங்கள் செயலாக்கும் எந்தவொரு தனிப்பட்ட தரவிற்கும் அதிகபட்சப் பாதுகாப்பைப் பயன்படுத்துகிறோம்.

தனிப்பட்ட தகவல்களை நாங்கள் சேகரித்து, சேமித்து, பயன்படுத்தும் அனைத்து இடங்களிலும், பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு நாங்கள் இணங்குகிறோம். தரவுத் தனியுரிமைச் சம்பவத்தை நாங்கள் பார்க்க நேர்ந்தால் அல்லது அதன் பகுதியாக நாங்கள் இருந்தால், அதை உடனடியாகக் குழுமத் தனியுரிமை, மனிதவளத் துறை அல்லது சட்டத்துறைக்கு நாங்கள் உடனே தெரிவிக்கிறோம்.

## தனிப்பட்ட தரவுகள்

அடையாளம் காணப்பட்ட நபர் அல்லது அடையாளம் காணக்கூடிய நபர் தொடர்பான எந்தவொரு தகவலும் தனிப்பட்ட தரவு ஆகும்.

→ **இதையும் பார்க்கவும்**
மக்களை நடத்துவது
சமூக ஊடகம்
மின்னணு வளங்கள்



# 1

### கற்றல் ஆதரவு

**கேள்வி:**
கிளாரியண்ட் -இன் ஊழியர்கள் தொடர்பான தனிப்பட்ட தரவுகளைக் கொண்ட மிக விரிவான அறிக்கையை வழங்குமாறு எனது அணிக்கு வெளியே உள்ள ஒரு மூத்த மேலாளர் என்னிடம் கேட்டார். அந்தத் தரவுகள் அவருக்கு ஏன் தேவை என்று எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. நான் விளக்கம் கோரவேண்டுமா?

**பதில்:**
ஆம். தனிப்பட்ட தரவுக்கு அணுகல் உங்களுக்கு இருந்தால், சட்டவிரோதப் பயன்பாட்டிலிருந்து அதைப் பாதுகாக்கும் பொறுப்பு உங்களுக்கு உள்ளது. நமது கொள்கைகளின்படி, தனிப்பட்ட தரவைச் செயலாக்குவதற்கு நியாயமான நோக்கம் இருக்க வேண்டும். கோருபவர் நியாயமான நோக்கம் எதையும் வழங்க முடியாவிட்டால், அல்லது நியாயமான நோக்கம் கொடுக்கப்பட்டுள்ளதா என்பது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாவிட்டால், குழுமத் தனியுரிமையின் ஆலோசனையைப் பெறவும்.

# 2

### கற்றல் ஆதரவு

**கேள்வி:**
நான் ஒரு புதிய குழு உறுப்பினரைப் பணி நியமனம் செய்வதில் ஈடுபட்டுள்ளேன், மேலும் நான் விரும்பும் சில விண்ணப்பதாரர்களின் பட்டியலை இந்த செய்முறையில் ஈடுபட்டுள்ள சக ஊழியர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். பின்னர் நான் அனுப்பிய மின்னஞ்சல்களில் தற்செயலாக, ஒரு வெளிப்புற சப்ளையரை சேர்த்துவிட்டேன் என்று கவனிக்கிறேன். நான் என்ன செய்யவேண்டும்?

**பதில்:**
நீங்கள் உடனடியாக சப்ளையருக்கு எழுதி, இந்த மின்னஞ்சல் அவர்களுக்கு உத்தேசிக்கப்பட்டது அல்ல என்பதை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டும். தயவுசெய்து மின்னஞ்சலை நீக்கிவிடுமாறும் தகவல்களை இரகசியமாக வைத்திருக்குமாறும் அவரிடம் கேளுங்கள். மேலும், நீங்கள் சம்பவத்தை குழுமத் தனியுரிமைக்குத் தெரிவிக்க வேண்டும்.

# துல்லியமான புத்தகங்கள் மற்றும் பதிவுகள்

கிளாரியண்ட் -இன் பதிவேடுகள் முழுமையானவையாக, உண்மையுள்ளவையாக, சரியானவையாக, உரிய நேரத்தில் அளிக்கப்படுபவையாக, துல்லியமானவையாக மற்றும் தெளிவானவையாக இருக்கவேண்டும்.

குறிப்பிட்ட நிதிநிலை அறிக்கைகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிதி அறிக்கை மற்றும் தகவல்தொடர்பு, அத்துடன் வெளிப்படுத்தல் தேவைகளுக்கு உட்பட்ட விஷயங்களை வெளியிடுவது ஆகியவற்றுக்குப் பயனுள்ள செயல்முறைகள் மற்றும் உள் கட்டுப்பாடுகள் உள்ளன என்பதை உறுதிப்படுத்துவது நம் பொறுப்பு ஆகும்.

கிளாரியண்ட் -இன் நிதி அறிக்கையிடலுக்கான அடிப்படையான நிதி அறிக்கைக் கொள்கைகள் மற்றும் IFRS (சர்வதேச நிதி அறிக்கையிடல் தரநிலைகள்) போன்ற உள்ளூர்ச் சட்ட விதிமுறைகளுக்கு இணக்கமாக இருப்பது இதில் அடங்கும். குழுவின் சொந்த உள்-கணக்குப் பதிவேடு பராமரிப்புச் செயல்முறைகளும் கடைபிடிக்கப்பட வேண்டும். எந்தவொரு சூழ்நிலையிலும் எங்கள் அறிக்கையிடல் ஏமாற்றும் வகையில் இருக்கக்கூடாது - இது கிளாரியண்ட் -க்குள் உள்ளகமாக அல்லது வெளிப்புறமாக இருக்கலாம்.

→ **இதையும் பார்க்கவும்**
மோசடி
லஞ்சம் மற்றும் ஊழல்
தகவல் பாதுகாப்பு
உள் வர்த்தகம்

# 1

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**

மீதமுள்ள பட்ஜெட்டை ஆண்டு இறுதிக்கு அருகில் சரியான முறையில் பயன்படுத்த, அடுத்த ஆண்டு செய்யவேண்டிய சேவைகளில் சிலவற்றை உடனடியாக பில் செய்ய எங்கள் ஆலோசகர்களிடம் கேட்கலாமா என்று யோசித்துக்கொண்டிருந்தேன்?

**பதில்:**

கிளாரியண்ட் -இன் புத்தகங்கள் மற்றும் பதிவுகள் அக்ரூவல் கொள்கைக்கு ஏற்ப வைக்கப்படும், அவை பரிவர்த்தனைகள் நிகழும் சமயத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும். எனவே, வேறொரு காலகட்டத்தில் நடக்கும் சேவைகளை நாம் இந்தக் காலகட்டத்தில் கணக்கில் எடுக்க முடியாது.

# 2

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**

எனது மேற்பார்வையாளர் ஒரு இன்வாய்ஸ் உடன் என்னை அணுகுகிறார், அது அவசரமாகச் செலுத்தப்பட வேண்டும் என்று கேட்கிறார். பர்ச்சேஸ் ஆர்டர் செயல்முறையைத் தவிர்த்துவிடுமாறும், இது நேரடியாக அவரிடமிருந்து ஒரு சிறப்பு ஆர்டர் என்று நிதித் துறையில் உள்ள சக ஊழியர்களிடம் கூறும்படியும் அவர் என்னிடம் கேட்கிறார். நான் அவர் உத்தரவைப் பின்பற்றலாமா?

**பதில்:**

கிளாரியண்ட் -இன் பணம் செலுத்தும் நடைமுறைகள் அனைவருக்கும் சமமாகப் பொருந்தும். அவசரச் சந்தர்ப்பங்களில் கூட, ஒரு மேற்பார்வையாளரால் இன்வாய்ஸ்களை “சிறப்பு ஆர்டர்” என்று பதிவு செய்ய முடியாது. பொதுவாக, ஒரு பர்ச்சேஸ் ஆர்டர் இருந்தாக வேண்டும். இந்தச் செயல்முறையைப் புறக்கணிக்க உங்கள் மேற்பார்வையாளர் வலியுறுத்தினால், நீங்கள் எதிர்த்துப் பேச வேண்டும் மற்றும் கொள்முதல் துறை, நிதித் துறை அல்லது இணக்கத்துறை ஆகியோரைக் கலந்தாலோசிக்க வேண்டும்.

# 3

## கற்றல் ஆதரவு

**கேள்வி:**

ஒரு சப்ளையர் மின்னஞ்சல் வழியாக என்னை அணுகி, இன்னும் பணம் செலுத்தாத இன்வாய்ஸ் பற்றி எனக்குத் தெரிவிக்கிறார். பணம் செலுத்துவதற்குப் பயன்படுத்துவதற்குப் புதுப்பிக்கப்பட்ட வங்கி விவரங்களையும் அவர்கள் என்னுடன் பகிர்ந்து கொள்கிறார்கள். வங்கி விவரங்களில் மாற்றங்களை எவ்வாறு செய்வது என்று எனக்குத் தெரியாது. நான் என்ன செய்யவேண்டும்?

**பதில்:**

எவையேனும் பின்னணி சரிபார்ப்புகள் தேவையா என்பதை மதிப்பீடு செய்ய நீங்கள் நிதித் துறையைத் தொடர்பு கொள்ள வேண்டும். நமது அமைப்பில் பயனாளிகள் வங்கிக் கணக்கு மாற்றங்கள் கிளாரியண்ட் -இன் புத்தகங்களில் சரியாகப் பிரதிபலிக்கப்படுவதை உறுதிசெய்யவும், மோசடி முயற்சிகளின் அபாயத்தைத் தணிக்கவும் கடுமையான உள் நடைமுறைகளைப் பின்பற்றுகின்றன.

# நாங்கள் பொறுப்புடன் தகவல் தொடர்பு கொள்கிறோம்

தகவல் தொடர்பு அத்தியாவசியமானது. உலகளாவிய அளவில் பணியிலமர்த்தும் நிறுவனம் மற்றும் பொதுவில் வர்த்தகம் செய்யப்படும் நிறுவனம் என்ற வகையில், எங்கள் தகவல்தொடர்புகளின் முக்கியத்துவத்தைப் பற்றி நாங்கள் அறிவோம். பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் மற்றும் எங்கள் சொந்த உள் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப, எங்கள் பங்குதாரர்களுக்கு உண்மை அடிப்படையிலான, சரியான நேரத்தில் தகவல்களை அளிக்கிறோம்.

இந்தப் பகுதியில்:

—

சமூக ஊடகம்

—

ஊடக உறவுகள் மற்றும் முதலீட்டாளர் உறவுகள்

# சமூக ஊடகம்

உள்ளக மற்றும் வெளிப்புறக் கூட்டாளர்களுடன் தொடர்பு மற்றும் ஒத்துழைப்பை ஆதரிப்பதற்கான வாய்ப்புகளை சமூக ஊடகங்கள் வழங்குகின்றன. சமூக ஊடகங்களை செயலூக்கமாகப் பயன்படுத்துவதை கிளாரியண்ட் ஆதரிக்கிறது, குறிப்பாக இதுபோன்ற செயல்பாடு கிளாரியண்ட் -க்கு மதிப்புச் சேர்க்கும்போது.



**நாம் சமூக ஊடகங்களில் தனிப்பட்ட முறையில் செயலூக்கமாக இருக்கும்போது, கிளாரியண்ட் -ஐப் பற்றி பேசும்போது, நிறுவனத்தின் நற்பெயரை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, நாம் சமூக ஊடகங்களில் எந்த இரகசிய அல்லது உள்- தகவலையும் வெளியிடமாட்டோம், மற்றும் நாம் ஒரு நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் அல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறோம்.**

**நாங்கள் கண்ணியமாக இருப்போம், யாரையும் துன்புறுத்த மாட்டோம். கிளாரியண்ட் -ஐ முதலாளியாகக் குறிப்பிட்டுள்ள தனிப்பட்ட கணக்குகளில் தாக்குதலான அல்லது சர்ச்சைக்குரிய உரையாடல்களில் ஈடுபட்டால் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படலாம்.**

**குழுத் தகவல் தொடர்புகள், சட்டம், மனிதவளத் துறை அல்லது எங்கள் உள்ளூர் மனிதவள மேலாளருடன் சரிபார்க்கும் முன், கிளாரியண்ட், ஒரு பொது விவாதம் அல்லது நெருக்கடி தொடர்பான தற்போதையப் பிரச்சினை அல்லது உள்ளடக்கம் குறித்து நாம் உள்ளிடக்கூடாது, ஏனெனில் வாசகர்கள் இதை அதிகாரப்பூர்வ கிளாரியண்ட் அறிக்கையாக எடுத்துக்கொள்வார்கள்.**

→ **இதையும் பார்க்கவும்**
தகவல் பாதுகாப்பு
உள் வர்த்தகம்
மின்னணு வளங்கள்

**கிளாரியண்ட் -இன் சமூக ஊடக அடிப்படை விதிகள் குறித்து நாம் அனைவரும் அறிந்திருக்க வேண்டும்:**

—

**கண்ணியமாக இருங்கள்,**
மக்களைத் துன்புறுத்தவோ, புண்படுத்தவோ வேண்டாம் - ஆன்லைனில் ஏதாவது சென்றுவிட்டால், அது எப்போதுமே ஆன்லைனில் இருக்கும்;

—

**இரகசியமான அல்லது உள் தகவல்களை வெளியிட வேண்டாம்;**

—

**உங்களுக்காகப் பேசுங்கள்,**
நீங்கள் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் இல்லை என்பதைத் தெளிவுபடுத்துங்கள்;

—

**வாடிக்கையாளர், முதலீட்டாளர் அல்லது ஊடகக் கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டாம்,**
கிளாரியண்டின் நிபுணர்கள் அதைக் கவனித்துக்கொள்வார்கள்;

-

**பிராண்ட் பாதுகாத்திடுங்கள்,**
உங்கள் தனிப்பட்ட பதிவுகளில் அல்லது உள்ளடக்கத்தில் கிளாரியன்ட் பிராண்டிங் அல்லது லோகோக்களைப் பயன்படுத்த வேண்டாம்;

—

**பதிப்புரிமையை மீற வேண்டாம்,**
நீங்கள் இடுகையிடும் அனைத்திற்கும் உங்களுக்கு உரிமை உள்ளது அல்லது உரியவர்களுக்கு க்ரெடிட் கொடுப்பதை உறுதிசெய்து கொள்ளவும்;

**சமூக ஊடகங்களில் பொருத்தமான ஈடுபாடு வரவேற்கப்படுகிறது. பொதுவெளியில் பகிரப்படும் எதிலும் சுதந்தரமாக ஈடுபடுங்கள், எடுத்துக்காட்டாக, ஒரு குழு நிகழ்வு அல்லது ஒரு தயாரிப்பு பற்றியப் பொதுத் தகவல்.**

**இந்த விதிகளைப் பின்பற்றும்போது, உங்கள் இடுகைகளில் எப்போதும் கிளாரியண்ட் -இன் கணக்கை (@Clariant) குறிக்கலாம் அல்லது #Clariant என்ற ஹேஷ்டேக்கைச் சேர்க்கலாம். எங்கள் அதிகாரப்பூர்வ நிறுவனக் கணக்குகளால் இடுகையிடப்பட்ட உள்ளடக்கத்தை மறு ட்வீட் செய்ய, பகிர மற்றும் கருத்து தெரிவிக்க நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம்.**

# ஊடக உறவுகள் மற்றும் முதலீட்டாளர் உறவுகள்

சட்டப்பூர்வ மற்றும் வணிகக் கடமைகளைக் கடைபிடிக்கும் போது வெளிப்புறப் பங்குதாரர்களுடன் திறந்த மற்றும் வெளிப்படையான தகவல்தொடர்புகளை கிளாரியண்ட் பின்பற்றுகிறது.

ஒரே-குரல்-கொள்கையின்படி நாங்கள் தகவல் தொடர்புகொள்கிறோம், மற்றும் பொதுவெளியில் இல்லாத தகவல்கள் பொதுவில்லாமல் இருப்பதை உறுதிசெய்கிறோம். எனவே, நியமிக்கப்பட்ட செய்தித் தொடர்பாளர்கள் மட்டுமே நிறுவனத்தின் சார்பாக ஊடகங்கள் அல்லது நிதிச் சந்தைகளுக்கு அறிக்கைகளை வழங்குவது முக்கியம். செய்தித் தொடர்பாளர்கள் குழுமத் தகவல்தொடர்புகள் அல்லது முதலீட்டாளர் உறவுகள் மூலம் அங்கீகரிக்கப்படுகிறார்கள்.

நமக்கு ஊடக விசாரணைகள் வந்தால், மேலும் கையாளுதலுக்காக அவற்றை குழுமத் தகவல்தொடர்புகளுக்கு அனுப்புகிறோம். நிதிச் சமூகத்தின் விசாரணைகளுக்கு முதலீட்டாளர் உறவுகள் மட்டுமே பதிலளிக்க முடியும்.

**நிதிச் சமூகம்**

நிதிச் சந்தையில் வணிகம் செய்யும் எந்த நபர் / நபர்கள் மற்றும் நிறுவனங்கள்.

**சொந்த மற்றும் சம்பாதித்த ஊடகங்கள்**

சொந்த ஊடகங்கள், என்பது உள்ளடக்கங்கள் கிளாரியண்டின் கட்டுப்பாட்டில் உள்ளவை, எ.கா. Clariant.com, நமது இன்ட்ராநெட் மற்றும் நமது சொந்தச் சமூக ஊடக சேனல்கள். சம்பாதித்த ஊடகங்கள் என்பவை சுயாதீன ஊடகங்கள் மற்றும் கிளாரியண்ட் -க்கு அவற்றின் ஆசிரிய உள்ளடக்கத்தில் நேரடிச் செல்வாக்கு இல்லை.

→ **இதையும் பார்க்கவும்**
பரிசுகள் மற்றும் பொழுதுபோக்கு
தகவல் பாதுகாப்பு
உள் வர்த்தகம்
சமூக ஊடகம்



# 1

**கற்றல் ஆதரவு**
**கேள்வி:**
நான் ஒரு நண்பரின் பிறந்தநாள் விருந்தில் இருக்கிறேன், அங்கு நான் அவருடைய உறவினருடன் உரையாடலில் ஈடுபடுகிறேன், அவர் ஒரு உள்ளூர்ப் பத்திரிகையாளர் என்று அறிகிறேன். நாங்கள் வேலையைப் பற்றிப் பேசும்போது, கிளாரியண்ட் -இன்ன எதிர்கால உத்தியைப் பற்றி அவர் என்னிடம் கேட்கிறார். இது ஒரு தனிப்பட்ட நிகழ்வு என்பதால், எனது நண்பரின் உறவினரை என்னால் நம்ப முடியும் என்று கருதுகிறேன், எனவே நான் அவருக்குச் சில தகவல்களைக் கொடுக்கலாம், சரியா?

**பதில்:**
இல்லை, நிறுவனத்திற்கு வெளியே உள்ள ஒருவருடன், குறிப்பாகப் பத்திரிகையாளர்களுடன் நீங்கள் உள்ளக மற்றும் சாத்தியமான இரகசியமான தகவல்களைப் பகிரக்கூடாது. இந்த வகையான தகவல்களைப் பகிர உங்களுக்கு அனுமதி இல்லை என்றும், அவர் கிளாரியண்ட் மீடியா உறவுகளை அணுகலாம் என்றும் அவரிடம் சொல்லுங்கள்.

# 2

**கற்றல் ஆதரவு**

**கேள்வி:**
ஒரு ஆன்லைன் பத்திரிகையின் பத்திரிகையாளர் ஒரு மின்னஞ்சலில் கிளாரியண்ட் -ஐப் பற்றி மிகவும் சாதகமான ஒரு கட்டுரையை எனக்கு அனுப்புகிறார், அதற்குப் பதிலாக, கிளாரியண்டிற்கான ஒரு விளம்பரத்தை அவர்கள் பத்திரிகையில் போடுவதற்கு வாங்கினால், அதை அடுத்த பதிப்பில் வெளியிட விரும்புகிறேன் என்று கூறினார். நான் ஒப்புக்கொள்ளவேண்டுமா?

**பதில்:**
இந்தக் கட்டுரை எதையோ எதிர்பார்த்து அளிக்கும் சேவையின் அடிப்படையில் மட்டுமே வெளியிட முடியும் என்றால், இது கட்டணம் செலுத்திய மக்கள் தொடர்புகளாகக் கருதப்படுகிறது. கிளாரியண்ட் கட்டணம் செலுத்திய மக்கள் தொடர்புகளில் ஈடுபடுவதில்லை. எனவே, நீங்கள் பத்திரிகையாளருக்கு பதிலளிக்காமல் மின்னஞ்சலை கிளாரியண்ட் மீடியா உறவுகளுக்கு அனுப்ப வேண்டும்.

# நாம் நமது வளங்களைப் பராமரிக்கிறோம்

கிளாரியண்ட் -இன் சொத்துக்களை எங்களுடைய சொந்தச் சொத்துக்களாக நாங்கள் கருதுகிறோம், அதன் பயன்பாடு குறித்த நிறுவனத்தின் விதிகளை நாங்கள் மதிக்கிறோம். கிளாரியண்ட் -இன் அறிவுசார் சொத்து என்பது நிறுவனம் செய்ய வேண்டிய மற்றும் மேலும் அபிவிருத்தி செய்ய வேண்டிய புதுமையான, போட்டியில் நிலை நிறுத்திக்கொள்ள உதவும் சாதகம் என்பதை நாங்கள் அறிவோம், மேலும், நாங்கள் அவற்றுக்கு மிகுந்த பாதுகாப்பைப் பயன்படுத்துகிறோம்.

இந்தப் பகுதியில்:

-

வணிகச் சொத்துக்கள்

-

மின்னணு வளங்கள்

-

அறிவுசார் சொத்து

# தொழில் சொத்துக்கள்

**கிளாரியண்ட் -இன் தொழில் சொத்துக்களை கவனித்துக்கொள்வது நம் ஒவ்வொருவருக்கும் கடமை. இழப்பு, சேதம், தவறான பயன்பாடு, திருட்டு, முறைகேடு அல்லது அழிவு ஆகியவற்றிலிருந்து அவற்றை நாம் பாதுகாப்போம். நெறிமுறைகள் குறியீட்டில் அல்லது ஒரு குறிப்பிட்ட கொள்கையில் குறிப்பிடப்பட்டிருந்தால் தவிர, தொழில் சொத்துக்கள் தொழில் நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படலாம்.**

**கிளாரியண்ட் -இன் உபகரணங்கள், இயந்திரங்கள், பிற தொழில்நுட்ப நிறுவல்கள் மற்றும் வசதிகள் மற்றும் வாகனங்களை சரியான மற்றும் வெளிப்படையான முறையில் மற்றும் கிளாரியண்ட் -இன் சிறந்த நலனில் முதலீடு செய்கிறோம், இயக்குகிறோம் மற்றும் அப்புறப்படுத்துகிறோம். கிளாரியண்ட் -இன் பணத்தைப் புத்திசாலித்தனமாகவும், பொருளாதார ரீதியாகவும், அது நம்முடையது போலவும் நிர்வகித்துச் செலவிடுகிறோம்.**

→ **தகவல் பாதுகாப்பு**
என்பதையும் காண்க



# 1

**கற்றல் ஆதரவு**

**கேள்வி:**
நான் ஒரு பணியாளர், எனது தனிப்பட்ட பயன்பாட்டிற்காக நிறுவனத்தின் காரை வாங்க விரும்புகிறேன். இது சரிதானா?

**பதில்:**
ஒரு வெளிப்படையான செயல்முறையின் அடிப்படை விதிகள், அனைத்து ஊழியர்களுக்கும் சமமான கிடைக்கும் தன்மை மற்றும் நியாயமான மதிப்புச் சந்தை விலை ஆகியவற்றை மதிக்கும் நிறுவனத்தின் சொத்துக்களின் அனைத்து விற்பனைக்கும் உள்ளூர்க் கொள்கைகள் பொருந்தும். பல ஊழியர்கள் ஒரே சொத்தை வாங்க ஆர்வமாக இருந்தால், உள்ளூர் நிர்வாகம் ஒரு வெளிப்படையான மற்றும் தெளிவான தேர்வுச் செயல்முறையை உறுதி செய்யவேண்டும்.

# 2

**கற்றல் ஆதரவு**

**கேள்வி:**
கிளாரியண்ட் அதன் பழைய உபகரணங்களை அப்புறப்படுத்திக் கொண்டிருக்கிறது. ஒரு முன்னாள் சக ஊழியர் உங்களை அணுகி, பழைய உபகரணங்களை சாதகமான விலைக்கு வாங்க விரும்புவதால் நீங்கள் அவருக்கு ஓர் உதவியைச் செய்ய முடியுமா என்று கேட்கிறார். இது சரிதானா?

**பதில்:**
அத்தகைய கோரிக்கைகளை நீங்கள் பெறும்போது உங்கள் வரிசை மேலாளரிடம் அல்லது சட்டத் துறையிடம் தெரிவிக்கவும். கிளாரியண்ட் -இன் சிறந்த நலனில், மிக உயர்ந்த விலையை உறுதி செய்யும் ஒரு விற்பனைச் செயல்முறையை நீங்கள் பின்பற்ற வேண்டும்.

# மின்னணு வளங்கள்

கிளாரியண்ட் -இன் மின்னணு வளங்கள் கிளாரியண்ட் தொழிலுக்கானவை. கணினிகள், நோட்புக்ஸ், அலுவலகத்தின் தொலைபேசிகள் மற்றும் மொபைல் போன்கள், டேப்லெட்டுகள், மென்பொருள், சிஸ்டம்ஸ், நெட்வொர்க்குகள் மற்றும் அனைத்துப் புற உபகரணங்களும் இதில் அடங்கும்.

நாம் கிளாரியண்ட் -இன் மின்னணு வளங்களை பொறுப்புடன், சட்டப்பூர்வமாக மற்றும் நெறிமுறையாகப் பயன்படுத்துகிறோம், மேலும் அவை நம்முடையது போல அவற்றைக் கவனித்துக்கொள்கிறோம். கிளாரியண்ட் -இன் மின்னணு வளங்களை அங்கீகரிக்கப்படாத பயன்பாட்டிலிருந்து மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்கிறோம். இதன் பொருள், நாங்கள் சட்டவிரோதத் தளங்களைப் பார்வையிடவோ, சந்தேகத்திற்கிடமான ஆவணங்களைத் திறக்கவோ, தனியார் நோக்கங்களுக்காக உரிம ஒப்பந்தத்தால் பாதுகாக்கப்பட்ட எந்தவொரு கிளாரியண்ட் மென்பொருளையும் நகலெடுக்கவோ அல்லது பணியிடத்தில் தனியார் மென்பொருளை நிறுவவோ மாட்டோம். மேலும், கிளாரியண்ட் -இன் மின்னணு வளங்களை நாம் வெளி வணிக முயற்சிகள் அல்லது தனிப்பட்ட நிதி ஆதாயத்திற்காகப் பயன்படுத்துவதில்லை.

ஒரு இனவெறி அல்லது ஆபாச உள்ளடக்கம் கொண்ட தகவல்களைத் தேடுவது, பதிவிறக்குவது அல்லது அனுப்புவது அல்லது வன்முறையைப் பெருமைப்படுத்துவது, குறிப்பாகத் தவறானதாகக் கருதப்படுகிறது, மற்றும் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளது மற்றும் சில இடங்களில் அவை குற்றச் செயல்களாகக் கருதப்படலாம்.

→ **இதையும் பார்க்கவும்**
தகவல் பாதுகாப்பு
உள் வர்த்தகம்
துன்புறுத்தல்

# அறிவுசார் சொத்து

**கிளாரியண்ட் -இன் கண்டுபிடிப்புகள் நமது நிறுவனத்தின் வெற்றியின் மையத்தில் உள்ளன, அவை பல வருடக் கடின உழைப்பு மற்றும் குறிப்பிடத்தக்க முதலீட்டின் விளைவாகும். ஒரு புதுமையால்-உந்தப்படும் நிறுவனம் என்ற வகையில், அறிவுசார் சொத்துரிமை என்பது நமது தொழிலைப் பாதுகாக்கும் மற்றும் வேறுபடுத்தும் முக்கியச் சொத்துக்கள் ஆகும்.**

**நாம் வெற்றிபெறுவதற்குத் தேவையான சாதகமாக இருப்பதால், நமது அறிவுசார் சொத்துக்களுக்கு அதிக அளவிலான சிறந்த பாதுகாப்பைப் பயன்படுத்துகிறோம். மீறல்களுக்கு எதிராக நமது அறிவுசார் சொத்துரிமைகளை நாம் பாதுகாக்கிறோம், மூன்றாம் தரப்பினரின் செல்லுபடியாகும் அறிவுசார் சொத்துரிமைகளை நாங்கள் மதிக்கிறோம்.**



## அறிவுசார் சொத்து

அறிவுசார் சொத்துரிமைகளில், குறிப்பாக, காப்புரிமைகள், வர்த்தக முத்திரைகள் மற்றும் செய்முறை ஆகியவை அடங்கும். நமது தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் பெயர்கள் மற்றும் நமது கார்ப்பரேட் பிராண்டுகள் பல நாடுகளில் வர்த்தக முத்திரைகளாகப் பதிவு செய்யப்பட்டு நமது போர்ட்ஃபோலியோவை வேறுபடுத்துகின்றன. தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளைக் காப்புரிமை மூலம் பாதுகாக்க முடியும். காப்புரிமைகள் தேசியக் காப்புரிமை அலுவலகங்களால் வழங்கப்படுகின்றன மற்றும் பதிவு செய்யப்படுகின்றன மற்றும் காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்பை உருவாக்குவது, பயன்படுத்துவது அல்லது விற்பது போன்றவற்றிலிருந்து மற்றவர்களை விலக்குவதற்கான உரிமையை அதன் உரிமையாளருக்கு வழங்குகின்றன. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (ஆர் & டி) மற்றும் செயல்பாடுகளில் நிபுணத்துவம் மற்றும் திறன்களைப் பெறுதல், மேம்படுத்துதல் மற்றும் பயன்படுத்துதல் ஆகியவற்றில், நாம் செய்முறைகளை உருவாக்குகிறோம், அவை இரகசியமாக வைக்கப்பட வேண்டும், இது சந்தையில் நம் செயல்திறன் மற்றும் போட்டித்தன்மையைத் தீர்மானிக்கும் காரணியாகும்.

→ **இதையும் பார்க்கவும்**
தகவல் பாதுகாப்பு
உள் வர்த்தகம்

# 1

### கற்றல் ஆதரவு

**கேள்வி:**
எனது வேலையில், கிளாரியண்ட் -இன் அறிவுசார் சொத்துரிமைகளுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை. அவை குழும அறிவுசார் சொத்து மேலாண்மை, குழுமத் தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்பு மற்றும் தொழில் ஆராய்ச்சிச் செயல்பாடுகளுக்கு மிகவும் முக்கியம், மேலும் அவை என்னைப் பாதிக்காது - சரியா ?

**பதில்:**
இது சரியல்ல. கிளாரியண்ட் போன்ற புதுமையால்-உந்தப்படும் ஒரு நிறுவனத்திற்கு, அறிவுசார் சொத்துரிமை என்பது நமது தொழிலைப் பாதுகாக்கும் மற்றும் வேறுபடுத்துவதற்குத் தேவைப்படும் முக்கியச் சொத்துக்கள் ஆகும். அதனால், அவை அனைவர் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நமது அறிவுசார் சொத்துரிமை மீறல் பற்றி நீங்கள் அறிந்திருந்தால் அல்லது கிளாரியண்ட்- க்கு மதிப்புமிக்க ஒன்றை நீங்கள் கண்டுபிடித்திருப்பதாக நீங்கள் நினைத்தால், தைரியமாக வெளிப்படையாகப் பேசுவதன் மூலம் நீங்கள் நிறுவனத்தை ஆதரிக்கலாம். மேலும், கிளாரியண்டின் செய்முறை அறிவைக் கண்டிப்பாக இரகசியமாக வைத்திருக்க மறக்க வேண்டாம்.

**CLARIANT INTERNATIONAL LTD**
Rothausstrasse 61 - 4132 Muttenz - Switzerland
© Clariant International Ltd, 2020

CLARIANT
ETHICS &
INTEGRITY